நிறமறியாத் தூரிகை

பா. மீனாட்சி சுந்தரம்





கடற்குதிரை

நிறமறியாத் தூரிகை

பா.மீனாட்சி சுந்தரம்

கடற்குதிரை

NIRAMARIYATH THOORIKAI (Poetry)
❖ Author : B. Meenakshi Sundaram ©
❖ First Edition : April 2005 ❖ Publisher : Kaveri Krishna
❖ Published by : Kadarkuthirai, A4 - First Floor, Nethaji Nagar
Peelamedu, Coimbatore - 641 004. ❖ Ph : 0422 - 5561553
❖ Cover Design : Nidhyan ❖ Concept : miA - 2005 & Virumbi
❖ Copies : 1100 + 100 ❖ Paper Used : 80 gsm N.S. Maplitho
❖ Typeset : Angel Kumarapandian, Coimbatore - 44
❖ Printed at : Mani Offset, Chennai - 600 005

Price Rs. **40/-**

நிறமறியாத் தூரிகை ❖ கவிதைகள்
❖ பா.மீனாட்சி சுந்தரம் © ❖ முதற் பதிப்பு : ஏப்ரல் 2005
❖ பதிப்பாளர் : காவேரி கிருஷ்ணா
❖ வெளியீடு : கடற்குதிரை, A-4, முதல் தளம், நேதாஜி நகர்
பூளைமேடு, கோவை–641 004 ❖ தொலைபேசி : 0422 – 5561553
❖ அட்டை வடிவமைப்பு : நித்யன் ❖ எண்ணம் : miA - 2005 & விரும்பி
❖ ஒளியச்சு : ஏஞ்சல், குமாரபாண்டியன், கோவை – 44.
❖ அச்சு : மணி ஆப்செட், சென்னை – 600 005.

விலை : ரூ. **40/-**

miA creation

இந்நூல்

வீடு வாங்குவதற்குப்
பதிலாக
வீடு நிறைய புத்தகங்கள்
வாங்கிய
அப்பாவிற்கு....

தூரிகையும் ஓவியனும்

'The wind and a Leaf' *என்ற தனது முதல் ஆங்கிலக் கவிதை நூலை எழுதிய பா.மீனாட்சிசுந்தரத்திற்கு தமிழில் இது முதல் கவிதை நூல்.*

இவர் கோவை அரசு கலைக்கல்லூரியின் முன்னாள் மாணவர் பேரவைத் தலைவர். மேற்கத்திய தொல் இலக்கியங்கள் குறித்த கோட்பாட்டு ரீதியான ஆய்வுக்கட்டுரைகளையும் மொழிபெயர்ப்பு இலக்கியங்களையும் படைத்து வரும் இவர் ஆங்கில இலக்கியத்தில் M.A., M.phil., *பட்டமும், இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியலில் முதுகலைப் பட்டயமும், ஆங்கில படைப்பிலக்கியத்தில் பட்டயமும் பெற்றுள்ளார்.*

கோவை ஹோப் காலேஜ் பகுதியில் ' Eden's Garden ' *என்ற ஆங்கிலத் தனிப்பயிற்சி மையத்தை நடத்திவரும் இவர் கோவையில் இயங்கிவரும் நெருஞ்சி இலக்கிய முற்றத்தின் அமைப்பாளர்கள் மூவருள் தென்பாண்டியன், முத்தமிழ் விரும்பி என்ற இருவருக்கும் மையமானவர்.*

பல் சான்றீரே! துகிலிகை பயிலும் பல் சான்றீரே! - சில குறிப்புகள்

கி.பி. 2005 - இல் எழுதப்படும் இந்நூலுக்கான அணிந்துரை அச்சாகும் காலத்தில் வெளியாகும் அநேக கவிதை நூல்களில் அணிந்துரை, வாழ்த்துரை, முன்னுரை, பதிப்புரை இன்ன பிற வகைமையெல்லாம் இருப்பதில்லை; இருப்பதற்கான அவசியமுமில்லை என்பதே இங்கே அடிக்கோடிடப் படவேண்டிய வாக்கியம் ஆயின், காலமும் கருத்தும் காரணிகளாகத் தமிழ்க் கவிதை உலகில் செலுத்தும் நிலைப்பாடுகள் தானென்ன?

நாமனைவரும் காட்சி ஊடகங்களில் கண்ட சுநாமியும் ஜப்பானிய சொல்லொன்றைப் புதிதாய்த் தமிழுக்குக் கொண்டுவந்து ஊடகங்கள் எழுதிக் குவித்துப் பெரும் பீதியை, பேரழிவுக்கான காரணத்தைத் தாண்டியும் ஊதிப் பெருக்கும் பேரவலம் மிக்க 2005. 'கடல் கோள்' என்ற செம்மொழிச் சொல்லை மீட்டெடுத்தோமா? நமக்குத் தான் சுநாமி இறக்குமதி பெரியதாயிற்றே! பேரழிவு இன்று மட்டும் தானா? மொழி காவாதான் அழிவும், சிதைவுகளும் ஆழிப் பேரலைகள் தந்த, அந்த ஞாயிறு விடியல் கண்ட (26.12.2004) பேரழிவு நினைவுகளும் இக்குறிப்புகளை மீட்டுகின்றன.

கடல் கோள், தென்மதுரை, கபாடபுரம், பஃறுளியாறு, குமரிமலை, இலெமூரியா, குமரியாறு, குமரிக்கண்டம் மற்றும் உலகின் முதல் மாந்தன் தோன்றிய இடம் எது? இதற்கெல் லாம் விடை இந்து மாக்கடலில் இருக்கிறது - என்று ரஷ்ய நாட்டு அறிஞர் அலெக்சாண்டர் கோந்த்ரதோவ் தனது ஆய்வு முடிவுகளைத் தரலாம்; அந்நூலின் (Riddles of Three Oceans) ஒரு பகுதி தமிழில் 1981 - இல் கூட வரலாம். ஆனால், "ஹோமோ சேபியன்" எனப்படும் அறிவு மனிதன் எப் பகுதியில் தோன்றினாலென்ன?

"ஆதி மனிதனின் தோற்றம் லெமூரியா எனும் பெருநிலப்பகுதியில் இருந்தது. கடல்கொண்ட தமிழகம் அப்பெருநிலப்பகுதியில் இருந்திருக்கிறது. பின் வந்த காலத்தில், கடற்கோளினால் இந்துமாக் கடலில் மூழ்கிப்போனது" எனச் சொன்னால், "பழமை வாதம்

பேசுகின்ற தமிழன்" என்றொரு மாற்றுக்குரல் தமிழ்ச் சூழலில் கேட்ட நிலையில்தான், "கடலால் கொள்ளப்பட்ட லெமூரியாக் கண்டம் என்பதே ஹோமோசேபியன் எனப்படும் அறிவுமனிதன் தொட்டில் எனப்படும்" - என்றொரு குரல் டார்வின், ஹக்ஸ்லி, எங்கெல்ஸ், எர்னெஸ்ட் ஹெகல் போன்ற துறைசார் அறிஞர்களால், வேற்று மொழி பேசுவோரால் முன்வைக்கப்பட்டது.

(நல்ல வேளை, பாவாணர் ஞா. தேய நேயன், ஆய்வுப் பேரறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி, பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன், பாவலரேறு பெருஞ்சித்திரனார் போன்ற தமிழ்க்குரல்கள் இல்லை.)

"திராவிட நாகரிகமே உலக நாகரிகத்தின் மிகப் பழமை வாய்ந்த தொட்டில்" என்ற கருத்துருவும் "சிந்து சமவெளி நாகரிகமும் பண்பாடும் திராவிடம் சார்ந்தவையே" என்ற ஆய்வும் அறிவுசார்ந்த பிற மொழியாளர்களால், பிற நாட்டு ஆய்வறிஞர்களால் வலுப்பட்டன என்பதுவும் இன்றைய தேதியில் முக்கியத்துவம் பெறுகின்றன.

அண்மைக் காலத்தில் தென் தமிழகத்தில் உள்ள ஆதிச்ச நல்லூரில் நடைபெற்ற புதைபொருள் ஆய்வுகள் மூலம் கண்டெடுத்த மட்பாண்ட ஓடுகளில் கண்ட எழுத்துருக்கள் தமிழக வரலாற்றை மேலும் பழமைக்கு, மானுடத் தோற்றக் காலத்தை நோக்கி இட்டுச் செல்கின்றன.

இவ்விடத்தில் அகழ்வாராய்ச்சி முடிவுகள் நிலவியலோடு நெருங்கிய உறவு பாராட்டி பண்டைக்கால மனிதனது கைவினைப் பொருட்களின் வாயிலாக காலமும் வரலாறும் நம்பிக்கையான முடிவுகளைக் கட்டமைக்கின்றன.

தொல் தமிழனது வாழ்நெறிகளும், திணைக் கோட்பாடுகளும் நுண்கலைகளும் கி.பி. 2005-இல் முன் வைக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் மேலைத் தேயத்துக் கோட்பாடுகள் ஈராயிரத்து ஐந்தாண்டுகளுக்கும் முற்பட்ட தமிழ்க் கவிதைகளை, தமிழ் மரபுகளை எவ்வாறு துண்டாடி நவீனத்துவம் என்றும் பின்-நவீனத்துவம் என்றும்

சிறு வெளிச்சம் காட்டி சுமார் நாற்பது கவிஞர்களை இற்றைத் தமிழ்ச்சூழலில் எழுதவும் கடித்துக் குதறவுமாக (எதுவும்) ஏற்றுமதியாகாத இறக்குமதிச் சூழல் வாய்த்ததெனச் சொல்லவும் கூடும். உலகளாவிய வணிகச் சமன்பாடு இங்கே வாய்ப்பதேயில்லை.

இந்நிலையில் இரண்டாண்டுகளுக்கு முன்னர் செக்கோஸ்லேவியா நாட்டு அறிஞர் கபிலசுவலபில் தமிழின் தொன்மை குறித்து வலியுறுத்திச் சொன்னது நமக்கென்ன பொருள் ஈட்டித் தரும்?

தொல்தமிழ் நிலத்துத் திணைக் கோட்பாடுகளறியாக் கவிஞர்கள் திண்ணைப் பேச்சாளர்களாய் மாறி பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைப் பேசியும் பெயர்த்தும் புழங்கி வருவது கண்டோம். பீடங்கள் அமைத்து சான்றிதழ்கள் கொடுத்து அணிபிரித்து விளையாடி குறுங்குழுவாதங்கள் நடத்தி பண்டைத் தமிழகத்து இனக்குழுச் சண்டையைப் போன்று உட்பகை கண்டு அரங்கேற்றும் செயல்பாடுகளால் வீழ்ந்தது தமிழ்க் கவிதையன்றி வேறென்ன?

புதிதாய்ப் படைக்க வரும் இளங்கவிஞர்கள் கற்றுணர அல்லது அச்சமுற மேலை நாட்டுக் கவிதைகளைப் பெயர்த்து விட்டால் போதுமா? நம் நாட்டுக் கவிதைகளை, பிறமொழியில் பெயர்த்தவர் உண்டா என்றால், "இங்கே இல்லையென்பார்; இருந்தும் தேறவில்லை" என்பார் தேறா மனிதர். தமிழ்த் தேர் நடை பயில விரும்பாத அக்கவிஞர் சிலர். அவரது வளர்ப்பும் பிறப்பும், வாழ்கின்ற நிலமும் அப்படி!

செம்மொழி, ஆட்சித் தமிழ் - செவ்வியல் தமிழ் என்பதற்காகவன்றி வேறென்ன செப்பமுறச் செய்தோம்? இலத்தின் அமெரிக்க, ஆப்பிரிக்கக் கவிதைகளை, பிற நாட்டுக் கதைக் கலைஞர்களை மட்டுமே படித்தால் போதும். தமிழன் 'நவீன இலக்கியம்' கற்றவனாகிடுவான்.

தமிழ் இலக்கிய வரலாறு, இலக்கிய மரபு, சங்கப்பாடல்கள், காப்பியங்கள், பிரபந்தங்கள், தனிப் பாடல்கள் இவையெல்லாம் வேறு வழியின்றித் தமிழ் படிக்கும், தப்பும் தவறுமாகப் பிரதியெடுக்கும் தமிழ்

மாணாக்கருக்குரியது. சிறுபத்திரிகைச் சூழலில் இரண்டொரு இசங்கள் கண்டு, கேட்டு நான்கைந்து பிறமொழிப் பெயர்களோடு படைப்புகளை மேய்ந்து கிடந்தால் தொல்காப்பியரது நானிலமும் நவீனமாகாதா; ஐந்திணைகளும் அப்படியே !

தமிழ்முனி, தொல்காப்பியன், கருப்பொருள், உரிப் பொருள், தமிழ்க்கலைகள், திராவிடம், கொடுந்தமிழ், எருமையூர், ஊருணி என்பனவெல்லாம் இன்றைய தமிழ்த் திரைப்படத்தின் சிரிப்புக் காட்சிகளுக்குரிய சொல்லாடல் கள் போலும்!

பா. மீனாட்சி சுந்தரம் யார்?

1990-களில் பெரியாரியம் பேசிய மீனாட்சி அல்லவா? 150 ஆண்டு பெருமை கொண்ட கோவை அரசு கலைக் கல்லூரியில் (கோவன்புத்தூர் - கோயம்புத்தூர் - கோயமுத்தூர்) அனைத்துக் கல்லூரிப் போட்டிகளில் பரிசுகள் வென்றவரா? அன்றைய கவியரங்குகளில் கவிதைகள் வாசித்தவர். 1995-96 இல் கல்லூரி மாணவர் பேரவைத் தேர்தலில் வென்று 'வானவில்' நடத்திய மாணவர் தலைவர்.

காதல் மனைவியோடு சாதி மறுத்து, தனியார் கல்லூரி ஆசிரியப் பணி மறுத்து சுயமரியாதை காரணமாய் தனியே ஒரு மொழிப் பயிற்சிப் பள்ளியை நடத்துகின்ற பா.மீ., பெண்ணியம், பெரியாரியம் பேசிய நண்பனொருவன் வரதட்சணை வாங்கிய மண விழாவுக்குச் செல்ல மறுத்ததேன்?

1998-இல் ஆங்கிலத்தில் முதல் கவிதைத் தொகுப்பு உ.பி., அலிகாரிலிருந்து ஒரு பதிப்பகத்தார் வெளியிட்டார். 2005-இல் நிறமறியாத் தூரிகை 33 வயதுக் கவிஞனது தாய் மொழியில் வரும் முதற் தொகுப்பு. பா.மீனாட்சி சுந்தரம் ஆங்கில மொழியாசிரியர்.

19.10.2003 முதல் கோயம்புத்தூரில் எந்தவித சமரசமு மின்றி நவீன இலக்கியத்தையும், புதிய இளங்கவிஞர் களையும் அறிமுகப்படுத்தி தொல்காப்பியர் முதல் கனிமொழி, மாலதி மைத்ரி, லீனா மணிமேகலை

வரையிலான படைப்பாளி களையும் ஒவ்வொரு திங்கள் தோறும் நான்காம் ஞாயிறு மாலையில் படித்துப் பகிர்ந்து கொள்ள விழையும் நெருஞ்சி இலக்கிய முற்றத்தின் உந்து சக்தி; மதுரையிலே தனது பண்பாட்டு வேர்களைக் கொண்ட ஆங்கில மொழியாசிரி யரின் இரண்டாவது ஆண் மகவு; ஆனாலும் கோவையி லேயே பிறந்து வாழ்பவர்.

நெருஞ்சியை விலைகொடுத்து வாங்க சிலர் முயன்றபோது "நெருஞ்சி - விற்பனைக்கல்ல" என்று சொல்லி முள்ளாகிக் காத்தவர். நெருஞ்சி என்பது தமிழ் மண்ணில் விளைகின்ற மூலிகைப்பயிர்; இயற்கை யோடியைந்து வாழ்ந்த திணைக் கோட்பாட்டுத் தமிழரின் உணவு மருத்துவம் - இன்றைய தமிழிலக்கியச் சூழலில் நெருஞ்சியொரு மூலிகை வைத்தியம். ஈராண்டுகளாகத் தொடர்ந்து வரும் இயங்கியலால் இளம் படைப்பாளிகளுக்கோர் இலக்கிய முற்றம். இது நாள் வரை எவ்வொரு குழுவின் நோய்க்கும் ஆட்படாமல் அறிவுத் தேட்டம் கொண்டோர் விரும்பும் நல்லதொரு தோட்டம்; இத்தன்மை கொண்டிலங்கும் முற்றத்துக் காப்பாளராய் பா.மீ.,

" உனக்கே எதிரானதாயிருப்பினும் கூட
உண்மை பேசுக" என்னும் குரான் வாசகம் அவருக்கு, அவரது படைப்புக்கு நல்லதொரு காப்புக் கேடயம்.

பா.மீ ஆங்கிலத்தில் எழுதும் இந்தியக் கவிஞர்; ஆயினும் திராவிடக் கவிஞர் என்பதல்ல முக்கியம். நல்லதாரு மரபறிந்த தமிழ்க் கவிஞன். "நெருஞ்சியின் ஜன்னல் வழியே" தன்னையே மீட்டுக் கொண்ட புதுக்கவிஞன் என்பதால் தொடருகின்றேன்...

வானம்பாடிகள் கவிதாமண்டலத்துக் கவிஞர்கள் இயங்கிய கோவை மண்ணில் சுமார் முப்பத்திரண் டாண்டுகளுக்குப் பின் இலக்கியத்திற்கோர் இயக்கமாய் நெருஞ்சி இலக்கிய முற்றம்.

தமிழர்களது நுண்கலைகளுள் ஒன்றாக சித்திரக்கலையும் உள்ளது. சித்திரம் எழுதும் கோலுக்கு துகிலிகை என்று

பெயர். துகிலிகை (Brush) கொண்டு புனையா ஓவியம் (கோட்டோவியம்) வரைவர். தஞ்சைப் பெருவுடையார் கோயில் சுவர்களில் சோழர்காலச் சித்திரங்களைக் காணலாம். திரைச்சீலை ஓவியங்களுக்கு 'ஓவிய எழினி' என்று பெயர் விளங்கியிருக்கிறது. பாறை ஓவியங்களுக்குச் சித்தன்ன வாசலே சான்றாகும்.

'நிறமறியாத் தூரிகை' கொண்டு கவிதைகளைத் தொகுத்தளித்துள்ள பா.மீ. யின் சித்திரங்களுக்கு "கலை இலக்கிய நூல்கள், மனித மூளையின் கலைப்பண்பினால் சிருஷ்டிக்கப்படும் விளைவாகும். ஆகவே புரட்சிக்கரமான இலக்கியமும், கலையும், புரட்சிகரமான எழுத்தாளர்கள், கலைஞர்களின் மனத்தில் பிரதிபலித்து உருவாகும் மக்களின் வாழ்க்கைச் சித்திரத்தின் விளைவாகும்" என்று யெனான் உரையாற்றிய 'மா ஓ சே துங்' கின் வரிகளே உரைகல்லாகும்.

நிறமறியாத் தூரிகை என்ற தலைப்பே தொல்காப்பிய நூற்பாவின் (400) அடிப்படையில் சொல் முரணா, பொருள் முரணா என்ற கேள்வியை முன் வைக்கிறது. எப்படியிருப்பினும் கவிஞர் பா.மீ., எப்போதும் எவர்மீதும் பகைமுரண் கொள்பவர் அல்லர். நட்பு முரண் நல்லவர் யாரிடத்தில் தான் இல்லை.

கவிதை என்றால் என்ன? உள்ளடக்கத்தின் நிலை என்ன? உத்தி என்பது யாது? திறனாய்வாளனின் பணி என்ன?

மதிப்பீடு என்ற பெயரில் இப்போது நடைபெறும் இலக்கியச் சச்சரவுகள் அல்ல; சண்டைகளில் வீழ்த்தப் படுவது நம் கவிதையா? தமிழ்க் கவிதையின் உலகத் தரம் எந்நிலையில் (கீழ்மட்டமா? மேல்மட்டமா?) உள்ளது?

உற்பத்தி, தரக்கட்டுபாடு போன்ற இன்றைய உலகளாவிய வாணிகம், தாராள மயமாக்கலில் ISO 9000, 9001 போன்ற தர நிர்ணயம் செய்பவர் யாவீர்? அப்படி யாயின் உலகத் தரத்தை எட்ட எந்த வலைத்தளத்தில் (Website) வரையறைகள் உள்ளன?

செம்மொழித் தமிழ்க்கவிஞர்கள் யாரேனும் உயிரோடு இருக்கின்றனரா? தமிழ்க்கவிதை உயிர்ப்புடன் உள்ளதா? உள்ளதெனில், பிறமொழியில் பெயர்க்கப்பட்டுள்ள கவிகள் யார்? பெயர்த்தவர்கள் எத்தனை பேர்? இளங்கவிகள் யாரேனும் பிறந்துள்ளனரா? உலகளாவிய தமிழ்ப் படைப்பு முயற்சிகளை புலம் பெயர்ந்த தமிழ்க் கவிகளும் படைப்பாளிகளும் முன்னெடுத்துச் செல்வது ஆரோக்கிய வாழ்வின் அறிகுறியாய்க் காண்கிறோம். பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை, கலைச் செல்வங்களை எம்மொழிக்கும் கொண்டு வந்து சேர்த்தல் நலமே தரும்.

ஜனவரி 1989-இல் போபாலில் நடைபெற்ற உலகக் கவிதை விழாவில் பங்குகொண்ட உலகின் 23 தலைசிறந்த கவிஞர்களின் கவிதைகளை ஆங்கிலம் வழித் தமிழில் 'உலகக் கவிதை' என்ற பெயரில் தொகுத்துத் தந்த பிரம்ம ராஜன்; 1990-இல் 'தற்கால மலையாளக் கவிதைகள்' என்ற பெயரில் திருப்பூரிலிருந்து ஆல்பா வெளியிட்ட ஜெயமோகன் தொகுத்த கவிதை நூல்; 'இன்றைய மலையாளக் கவிதைகள்' (2000) என்ற நூலைத் தந்த தமிழினி பதிப்பகம்; சச்சி தானந்தன் கவிதைகளை மலையாளத்திலிருந்து (2001) தமிழில் 'கவிதை மீண்டும் வரும்' என்று சொன்ன கவிஞர் சிற்பி.

இந்திய ஆங்கிலக் கவிஞரான ஷிவ்.கே.குமாரின் கவிதைகளைத் தமிழிலே தந்த சாகித்திய அகாதமி (1998), நோபல் பரிசு பெற்ற போலந்து நாட்டு கவிஞர் விஸ்லோவா சிம்போர்ஸ்கா கவிதைகளைத் திருப்பூர் கனவு வெளியீடாக (1999) மொழி பெயர்த்துத் தந்த யமுனா ராஜேந்திரன், கோவை விடியல் பதிப்பகம் (2001) வெளியிட்ட 'தேர்ந்தெடுக்கப்பட்ட ஈழத்துக் கவிதைகள்', 'கவிதையின் திசைகள்' என்பதாக உலகக் கவிஞர்கள் எட்டுபேரின் நாற்பது கவிதைகளை அகரம் (2003) வெளியிடத் தமிழில் தந்த கவிஞர் சுகுமாரன், நோபல் பரிசு பெற்ற இலத்தீன் அமெரிக்கக் கவிஞரான ஆக்டோவியா பாஸ் அவர்களுடைய கவிதைகளைத் தந்த வ.உ.சி. நூலகம் (2003), இவையன்றி மாசே-துங் கவிதைகள், ஷெல்லி, பைரன், கீட்ஸ்

கவிதைகள், மகாகவி தாகூரின் கீதாஞ்சலி, உமர்கையாம், கலில் கிப்ரான் இன்னும் இங்கே விடப்பட்டுள்ள மொழி பெயர்ப்பு முயற்சிகளும் தொகுப்பு களும் 21-ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை உலகத்திற்கு வெளிச்சம் காட்ட, தேக்க நிலை மாற உதவும் கலை முயற்சிகள் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

ஒத்தையடிப் பாதையெனில் ஒருவழிப் பயணம் என்றா பொருளாகும்; பெருவழித் தடத்தைப் போடுவது எங்ஙனம்? ஏற்றுமதி - இறக்குமதி என்ற இருவழிப்பயணமே நமது செம்மொழித் தடத்தை வலுவாக்கும் எனச் சொல்வதும் தவறாகுமோ?

நம் நாட்டு வளத்தை ஏற்றுமதி செய்வது எக்காலம்? ஏதேனும் செயல் நெறிகள், வழிகாட்டுதல்கள் உண்டா? இல்லையென்று சொல்லும் மனம் இல்லாத பெருங்கருணை யாளர்கள் எங்கிருந்து, எந்நாளில் வழி காட்டுவர்?

"இங்கு மேய்ப்பர்களே மேயும்போது
செம்மறியாடுகள் செய்வதென்ன?"

ஏ.கே. ராமானுஜன் போன்று Poems of love and war, வையாபுரிப் பிள்ளையைப் போன்று History of Tamil Language and Litrerature என்று ஆங்கிலத்தில் தமிழின் தொன்மை, இலக்கியம் பற்றி நூலெழுதும் அறிஞர் பெருமக்கள் யாவர்? மொழி மாற்றித் தர யத்தனிப்பவர் உண்டா? இல்லை ஜி.யு.போப், கால்டுவெல், வீரமாமுனிவர் போன்றவர்தாம் மீண்டும் இங்கே வந்து பணியாற்ற வேண்டுமா?

"உலகத் தரத்தில் இல்லை தமிழ்க்கவிதை. தமிழ்க்கவிதை தேக்கமுற்றது ; தமிழ்க்கவிஞர்கள் தேங்கிப் போனார்கள்" என்ற கருத்துகோளை விட்டு விலகி நடுநிலையில் நின்று கயிற்றின் மேல் மூங்கில் கழியோடு நடந்து சென்று நல்ல தமிழ்ப்படைப்புகளைக் கண்டடைந்தவர் யார்? சிவப்பு மசியினால் "தமிழ்க்கவிதை" என்றெழுதிப் பெருக்கல் குறியிட்டு வீழ்த்திய கவிதை மதிப்பீட்டாளர்கள் வெளிப் படையாய்க் காட்டுவரோ தன் வீட்டுச் சன்னல் வழி

சாக்கடையில் வீசியெறிந்த நூற்களை; தமிழ்க்கவிதை திருக் கூட்டத்தில் வீர, வீராங்கனைகள் யாரேனுமுளரோ?

பாரதியோடு தேங்கிவிட்டது; தாசனோடு வீங்கி விட்டது. பிறகு காணாமல் போனது? தேடிக்கொண்டிருக் கிறோம் மேலை நாட்டுக் கவிவாணர்களை!

அப்புறம் ஒரு சிலர் வந்தார்கள்; எழுதிக் காணாமல் போயினர். தேடிக் கிளம்பிவிட்டோம். இதற்கிடையில் சிற்சில பட்டியல் உண்டு! க.நா.சு. கெட்டார் போங்கள்! மதுச் சாலைகளில், சிற்றிதழ் படிக்கும் வேளைகளில் முகாமிட்டு பட்டியல் தயாரிப்பதுண்டு... விடிந்த பிறகு ஊர்ந்து கொண்டிருக்கும் தமிழ் நண்டு பிறிதொன்றைப் பிடித்திழுக்கும்! புலம் புயர்ந்தோர் பரவாயில்லை படைப்பு வெளியில் குடியேற்ற நாடுகளில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறார் என்பதில் பெருமிதம் கண்டோம்.

"திறனாய்வாளனின் முதன்மையான பணி கவிதையைப் போற்றுவதோ தூற்றுவதோ அல்ல; கவிதை உத்திகளையும் உட்பொருளையும் விளக்கிச் சொல்வதே ஆகும்" என்ற ராபர்ட்க அவர்களின் கூற்றும் "ஓர் இலக்கியப் படைப்பாளி படைக்க விரும்பும் செய்தி அல்லது அடிக்கருத்தைத் தவிர ஏனைய அனைத்தும் உத்திமுறையால் உருவாக்கப்பட்டவை" என்ற மார்ட்டின் கிரே அவர்களது வரையறையையும் காணுமிடத்து தமிழ் இலக்கிய மரபில் உத்தி குறித்து முனைவர் மு.வ., முனைவர் சி. இலக்குவனார், முனைவர் வ.சுப.மாணிக்கம், முனைவர் ச. வே.சுப்பிரமணியம் போன்றோர் சிலப்பதிகாரம், கம்பர் காவியம், தொல்காப்பியம் போன்றவற்றைச் சுட்டி பல வரையறைகளைத் தந்துள்ளதையும் அவதானிக்கின்றோம்.

1930 முதல் **1940** வரை புதிய திறனாய்வு நெறியைக் காட்டிய ஜான் குரோ ரேன்சம், ஆலன் டேட், இராபர்ட் பென் வாரன், கிளைந்த் புரூக்ஸ் ஆகியோர் "ஒரு கவிதையைச் சுவைப்பதற்கு அக்கவிதை இயற்றியோரின் வரலாறு தேவையில்லை. அக்கவிதையின் கூறுகளை ஆய்ந்து அவை எவ்வாறு ஒரு முழுமைபெற்ற வடிவமாக ஒருங்கிணைந்து உள்ளத்திற்கு இன்பம் பயக்கின்றன எனக்

காண்பதே தேவையாகும்" என்கின்றனர். இலக்கிய வடிவத்திற்கு வெளியே உள்ள புறச்செய்திகள் பற்றிய கண்ணோட்டம் போதுமானது என்பதே இப்'புதிய திறனாய்வாளர்கள்' (New Critics) காட்டிய பாதை.

ஒரு கவிதையை வாசிக்கும் பொழுது நீண்ட நெடிய மரபின் வேர்களையும் விழுதுகளையும் கொண்டு பரந்து பட்டு வாழும் தமிழ்க் கவிதையின் மரபுத் தொடர்ச்சியினை, பின்புலத்தை விட்டு வெளியேறிட முடியுமா? இந்நூலில் பின்னுரையாக உள்ள 'கலிவரின் பயணக்குறிப்புகள்' கவிஞனிடத்தில் நெருக்கத்தை நெய்து விடுகின்றன.

பா.மீ. கவிதைகள் வைகை ஆறு, ஆரப்பாளையம், வாடிப்பட்டி என்று தந்தையின் ஊர் பற்றிப் பேசினாலும் தாயின் பிறந்தகம் உள்ள கொங்கு மண்டலத்தில் நொய்யலாறு, கோவையிலுள்ள புலியகுளம், சுங்கம் பகுதிகளையும் பதிவு செய்கின்றன. தனது வேர்களைத் தேடும் முயற்சியில் அம்மத்தா, வாடிப்பட்டி மாமா, அம்மன்குளத்திலுள்ள நெருஞ்சி சூழ்ந்த புதர்கள் இத்தொகுப்பில் வந்துபோனாலும் 'காக்கசஸ் மலை உச்சிக்கு வந்த தேவகுமாரன் எங்கே எனது ஈரற்குலை' என்று கேட்கிறான். ஜோர்டான் நதியில் மீன்களுக்காக வலை வீசுபவர்கள் நம்மோடு பயணிக்கிறார்கள் எனினும் தன் மகளுக்கு நொய்யலாற்றைக் காட்டும்பொழுது முப்பது வருடங்களுக்கு முன்னால் அம்மா காட்டிய ஆற்று நினைவும் பதிவாகின்றன.

புத்தக ஆசை கொண்ட அப்பா, சர்க்கரை நோய் முற்றி காலில் சீழேறித் துடிக்கும் அம்மா, சென்னைக்குக் கூட்டிப்போகச் சொல்லும் குழந்தை, பூளைமேடு மற்றும் சிங்காநல்லூர் பகுதிகளுக்குட்பட்ட 'இருப்புப் பாதை லெவல் கிராஸிங்' கில் நிற்கும் போது கடக்கும் புகை வண்டி, ஒவ்வொரு நாளும் பள்ளிப் பாதையில் காத்திருக்கும்போது நடைபெறும் உரையாடல் **26-12-2004** வங்காள விரிகுடாக் கடலில் ஏற்பட்ட கோளின் காரணமாக முற்றுப்பெறுகிறது. குழந்தை இளவேனில், ஆழிப் பேரலை அதிர்வை உள்வாங்கிய ஈர நெஞ்சின் தந்தையாக மறுக்கும்

கவிஞர், நதிக்கரையோரம் பறக்கும் ஆட்காட்டிக்குருவி, ஆலாந்துறை நண்பன் ராமசாமி நமக்கும் நண்பனாகிறான்.

மகுடேசுவரனின்
சென்ட் ரப்பரை
நான் திருடியதாய் நினைத்து
முழிகளை வீங்கவைத்த
இரண்டாம் வகுப்பு மிஸ்ஸிற்கு
குற்றத்தை நிரூபிக்கக் கிடைத்த
ஒரே தடயம்
என் கறுப்பு முகம்.

இந்நூலில் பக்கம் 52-இல் உள்ள 'சான்று' கவிதை தமிழ் நிலத்தில் சாதி நிறம் படிந்து கிடக்கும் அவலம் கொண்ட காட்சியா? இல்லை அமெரிக்க கருப்பினக் கவிஞனது விடுதலைக் குரலா? ஒடுக்குமுறையின் பதிவா? தொடக்கப் பள்ளிப் பருவத்திலேயே அழுத்தப்படுவதால் ஏற்படும் நிரந்தர ஒடுங்குதலா?

வீடற்ற குழந்தையொன்று
சோப்பு நுரையை
ஊதியபடி உடைத்தெறிகிறது
ஓராயிரம் உலகங்களை.

என்று 'உயிர்ப்பு' கவிதை பேசினாலும் இந்நூல் "வீடு வாங்காமல் வீடு நிறைய புத்தகங்கள் வாங்கிய தந்தைக்கு' அர்ப்பணிப்பு செய்யப்படுகிறது.

உலகங்களை உடைத்து வாழ்வது வீடற்ற குழந்தை மட்டுமா? நூல் வெளியில் நுண்கலைகளை வாசித்தறியும் முயற்சியில் பா.மீ., மட்டுமல்ல தென்பாண்டியன் போன்றோரும் புது வீடு, புது உலகமென பயணிக்கும்போது தமிழ்க் கவிதைகளில் புதுக் குருதியோட்டம் காண்கிறோம்.

தந்தை பிறந்த (மதுரை) மண்ணின் வேர்களைத் தான் பிறந்த (கோவை) மண்ணிலிருந்து தேடும் கவிஞர், சுமேரிய

நாகரிகத்தின் களிமண் சதுரங்களில் பொறிக்கப்பட்ட லிபிகளை, கில்காமேஷ் காவியத்தை, சாலமோனின் சங்கீதங்களை, சாஃபோவின் பாடல்களை, எகிப்திய ஞானப் பிரதிகளை தொன்மையான காலத்திலிருந்து இந்நவீன யுகத்திற்கு, தமிழ் நிலத்திற்கு இடம் பெயர்க்கும் கட்டுரைகளைத் தந்தாலும், இந்திய ஆங்கிலக் கவிஞராய் இருந்தாலும் தனது தாய்மொழியில் எழுதிய இம்முதல் தொகுப்பில் இரு கவிதைகள் தவிர வேறெங்கும் முடிச்சுகள் இல்லை. தனது ஆற்றைப்போலவே இருண்மையற்று மணல்வெளியில் கவிமனது படரக் காண்கிறோம்.

ஆற்றோர நெருஞ்சிப் பூக்களும், பொய்யாக் குலக் கொடியாம் வையை எப்போதாவது நீரோட்டம் காண்கின்ற இந்நாளில் நீள்கின்ற மரபிலிருந்து நல்ல கவிதைகளை உலகளாவிய முயற்சியாக குறுங்குழுவாதம் தாண்டி தமிழிலிருந்து ஆங்கிலத் திரைக்குப் பெயர்க்கவேண்டிய கடமை இத்தூரிகைக்கு இருக்கின்றபடியால் கோவையின் நெருஞ்சி இலக்கிய முற்றம் நீறு பூத்த நெருப்பாய், நிலமாய்க் காத்திருக்கிறது. இத்தூரிகைக்கும் நிறமுண்டு; ஒவியனுக்கும் வளமான மரபுண்டு.

புறநானூறு, பாடல் **193**-இல் ஓரேருழவர் பாடியவாறு, 'திருப்பிப் போடப்பட்ட மான்தோலைப் போல காட்சித் தரும் வெண்களர் நிலத்தில் ஒருவனால் துரத்தப்படும் மானானது தப்பிப் பிழைக்கவும் கூடும். ஆனால், இடும்பை நிறைந்த இவ்வாழ்வில் உறவு இணைப்புகளை விட்டு நம்மால் ஓடவும் முடியாது; உய்யவும் முடியாது'. ஆதலின் நாளைய வரலாற்றின் நற்பாறை ஒவியங்களுக்கான நல்வாழ்த்துக்களுடன்...

முகாம் : தஞ்சை
10 - 04 - 2005

தமிழ் விரும்பி
Virumbi@yahoo.co.in

புன்னகை

கூடுதலாய் இருந்த கால்களை
கைகளாய்த் திருத்தி அமைத்ததற்கு
மூட்டையாய்க் கட்டிக் கொடுத்து வந்தோம்
இதழ்களின் மொழியை.

●

புது இரவு

அப்பாவின் பழைய சட்டை கிழித்துத்
திரிகள் தயாரித்து
ஒவ்வோர் இரவிலும்
மண்ணெண்ணெய் ஊற்றி
அம்மத்தா ஏற்றி வைத்த
காலி 'மை' புட்டியாலான விளக்கு
அவள் இறந்த ராத்திரியில்
அணைந்து கிடந்தது

தற்காலிகமாய்ப் பெற்ற
இரவல் மின்சார இணைப்பு.

●

நிகழாத சந்திப்பு

உயிர்த்தெழுந்த
சில நாட்களுக்குப்பிறகு
காக்கசஸ் மலையுச்சிக்கு
வந்த தேவகுமாரன் எங்கே எனது
ஈரற்குலையென்று கேட்டான்

பூமியின் உச்சியில்
சொர்க்கத்தின்
நீலநிற வாயிலோரம்
நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம்

கொறித்துத் தின்னவரும்
கழுகிற்கு இரவெல்லாம் என்
ஈரற்குலையை வளர்த்துக்
கொண்டிருந்தேன்

எரிந்து கொண்டிருந்த
நெருப்பின் அருகே
மது அருந்தியபடி
என் வேதனையைக்
கேட்டுக் கொண்டிருந்தான்
தேவகுமாரன்

காலையில் முழுதாய்
வளர்ந்தவுடன்
எந்தத் தீவிலிருந்தோ
காற்றில் மிதந்தபடி
தன் நிழல் மீது
வந்தமர்ந்து தின்னத் துவங்குகிறது

தேவனின் ஆணைப்படியே
அது நிகழ்வதால்
ஜோர்டான் நதியில்
அவர்கள் மீன்களுக்கு மட்டுமே
வலை வீசுகிறார்கள்.

●

முதிர்ச்சி

அரிதாய்ச் சாத்தியப்படுகிற
ஞாயிற்றுக்கிழமை
விளையாடக் கூட்டிப்
போகச்சொல்லும் குழந்தை

காத்திருக்கிறது...
என் சிகரெட்டின்
கடைசி இழுப்பிற்காக.

●

நிரப்பமுடியாத இடைவெளி

மொழியை மீறிய என்
மனதின் பிரதி ஒன்று
இன்னும் இருக்கும் முத்துவேலிடம்

ஏராளமான எழுத்துப் பிழைகளுடன்
ஆறாம் வகுப்பில் அவனுக்கு
எழுதிய இன்லென்ட் லெட்டர் ஒன்று

ஒவ்வொரு வகுப்பையும்
கோபி கோவில்பட்டி
திருச்சி பழனியென்று
ஒவ்வொரு ஊரில்
படித்த முத்துவேல்
மே மாச லீவிற்குத்தான்
வீடு வருவான்

இனி வாத்தியார் பையனும்
சர்வேயர் பையனும்
அவிழ்த்துவிட்ட
கழுதைகள் தானென்று
யாரோ சொல்லியதாய் நினைவு

வெரைட்டி ஹால் ரோடு
ஆர்.எஸ்.புரம், சென்ட்ரல், ஸ்ரீபதி
ரெயின்போ என்று
நான் மாறி அவனும்
அவன் மாறி நானும்
என் *பி.எஸ்.ஏ.* சைக்கிளில்
டபுள்ஸ் அடிப்போம்

சினிமா, ஆர்கெஸ்ட்ராவென்று
விரைவில் தீர்ந்துபோகும் விடுமுறை

ஒருமாத பரீட்சை லீவின்
ஊர் சுற்றலுக்காக
வருடம் முழுக்க
வைராக்கியத்துடன் பிரிந்திருப்போம்

இன்றெல்லாம்
நானும் அவனும்
அருகருகே இருக்கின்றோம்

முகங்களை கழற்றி
எங்கோ வீசிவிட்டு
98422-41696
98941-31480
என்ற எண்களுக்குள்ளும்
எங்களைக் கண்டுபிடிக்கும்
நேரமற்று இருவரும்
ஆளுக்கொரு சவப்பெட்டியை
அவரவர்க்குள்
தூக்கிச் செல்கிறோம்.

●

அவளும் அவளும்

அவள் பெண்ணாக இருக்க விரும்புகிறாள்
அதற்காகவே
கட்டுக்கள் மீறி எங்கோ
ஓடுகிற அவளை இழுத்து வருகிறாள்

ஓர் அடிமையைத் துன்புறுத்தி
வேலை வாங்குவதைப் போல்
அவளைக் கட்டாயப்படுத்துகிறாள்

உதடுவரை வந்து
பிதுங்கி வெளியே வரவிருக்கும்
அவளை
தன் மாயங்களின் பெருவெளிக்குள்
இழுத்துச் செல்கிறாள்

தனிமையில் அவள் பெற்றுக் கொள்கிற
ஒவ்வோர் இரவிலும்
அவளுக்கு இடுகிற கட்டளையிலும்
புரிகிற மொழியில் அவளுக்குப்
பேசத் தெரிவதில்லை

ஒப்பனைகளின் அழுத்தத்தால்
அவள் நசுங்குகிற வேதனை
ஒரு குயிலின் கீதமாய்
மிஞ்சுகிறது.

●

உயிர்ப்பு

வீடற்ற குழந்தையொன்று
சோப்பு நுரையை
ஊதியபடி உடைத்தெறிகிறது
ஓராயிரம் உலகங்களை.

●

கடைசிப் பயணம்

வலது கால் கட்டைவிரல்
கருகிப்போயிற்று
கிள்ளிப் பார்த்தாலும்
ஒன்றும் தெரியவில்லை என்கிறாள்.

62 வருடங்களாய்
ஓயாமல் சுமந்ததால்
இன்று தன்னையே
சுமக்க முடியாமல்
கழிவறைக்கும் குளியலறைக்கும்
என் கைப்பிடித்து நடக்கிறாள்

துணிச்சலுடன்
எவர் கையும் பிடிக்காமல்
சுடுகாடு சென்றவள்.

●

தோற்றம்

ஜன்னல் தனது பரிணாமத்தைக்
களிமண்ணிலிருந்து
துவங்கியது .....

தூசுபடிந்த கம்பிகளுக்கிடையே
செவிகொடுத்து உலகம்
மனிதம் சொட்டிய
இரத்தத்தின் மொழிகேட்டபொழுது
காற்று வேண்டுகிற வீட்டிற்கெல்லாம்
ஜன்னல்கள் அறிமுகமாயின

கோவேறு கழுதை மீதமர்ந்து
ஊர்க்கதைப் பேசிப்
பயணம் போன மனிதர்களை
நாம் ஜன்னல் வழியே
பார்த்துக் கொண்டிருந்தோம்

சிறுபிள்ளையொன்று
ஆசையாய் தன் பலூனை
இரு கைகளாலும்
அணைத்துப் பிடித்துக் கொள்தல்போல
ஜன்னல் தன் நீண்ட கைகளை
அகல விரித்து
பூமியை இறுகப் பிடித்திருக்கிறது

ஜன்னல் மட்டும் இல்லாமல் போயிருந்தால்
பூமியை யார் திருடியிருப்பார்
என்ற யோசனையில் இன்றும்
வாழ்ந்து கொண்டுதான் இருப்போம்
நமக்கு மிஞ்சிய கோள்கள்
ஏதோ ஒன்றிலிருந்து.

•

ரயில் பார்த்தல்

பள்ளிக்கு அழைத்துச் செல்லும் பொழுதும்
வீட்டிற்குக் கூட்டி வரும் பொழுதும்
வாகன நெரிசலிடையே
வேகமாய்க் கடக்கும் தொடர்வண்டியில்
ஒரு நாள் மெட்ராசிற்குக்
கூட்டிச் செல்வாயா என்று தினமும்
கேட்கும் பிள்ளையிடம்
"வேண்டாம்"
என்று கூறும் என்னை
ஏன்? என்று வினவும்
அதன் ஒற்றை வார்த்தைக்குப் பின்னால்
எழுந்துவரும் ஆழிப்பேரலை.

●

அடையாளம்

நிறங்களை விற்றுவிட்டு
தோட்டம் வரும் வண்ணத்துப் பூச்சியை
அகதியைப் போல் பார்க்கும்
ஓடையோரப் பூச்செடிகள்.

●

நீர்மை

'இந்த ஆத்துல
எறங்கி
இப்படியே சினிமாப் பாக்கப்
போயிடுவேன்'
வாழ்ந்த காலத்தில்
அப்பா அடிக்கடிச் சொல்வார்

இறப்பிற்கு முன்பு
ஒருமுறையும் மதுரை பார்த்ததில்லை

கோயில்களில், உணவகங்களில்
உச்சிவெயிலில் கருத்துப்போன மனிதர்கள்
நடந்துகொண்டிருந்த வீதிகளில்
எங்காவது இருப்பாரெனத் தேடியும்
கிடைக்கவில்லை

தொழுநோயாளியைப்போல்
ஆரப்பாளையம் அருகே
கிடந்தது வைகை

பெரியம்மாவுடன் முதல் சந்திப்பு
தொங்கிய காதுகளோடு
எலும்பும் தோலுமாய் இருந்தாள்

'பாத்துப் பல வருஷம் ஆகியும்
பொணத்தப் பாக்கவும்
குடுத்து வைக்கல'

பெரியம்மா விசும்பி
அழுத ஓசைக்குள்
அப்பா வைகையில்
நீச்சலடிக்கும் சத்தம்.

●

சாதல்

அருகில் சென்று
தொட்டுப் பார்த்தால்
கண்ணாடிப் பெட்டிக்குள்
என் உடலின் அடக்கம்
நன்றாய் அரங்கேறியதாய்
அதனுள் உலவுகிற நான்
என்னிடம் சொல்கிறேன்

குரல்வளை அறுக்கப்படுகிற
நொடிகளை
எல்லோரும் உறங்கிவிட்ட
இரவின் மய்யமொன்றில்
எந்தப் பெருங்கடலின்
ஆழத்திலேயோ
கொட்டிவிடுகிறது பூமி

தம் சுவடுகள்
தெரியக்கூடாதெனக்
காற்றின் மீதேறி வீடு செல்கிற
நேரங்களின் துடிதுடிப்பை
மொழிபெயர்க்கும்
பறவையின் சிறகுகள்.

●

பணி

கடிகாரத்தைப் பார்த்தபடியே
பால் கொடுத்துவிட்டு
அலுவலகப் பதிவேட்டில்
அவளிடும் கையொப்பத்தில்
நீலநிறம் கொள்கிறது
குழந்தையின் கண்ணீர்.

•

நெரிசல்

திருவிழாக் காண மாமா
வாடிபட்டி போயிருந்தாராம்

பூட்டிய கதவு
முகத்தில் ஓங்கி அறைய
அப்பா வாழ்ந்த வீட்டில்
ஓர் இரவல் நாற்காலியில்
அம்மாவை இளைப்பாற்றி
கோவில்பட்டிக்குப் பயணம்

அப்பாவிற்குத் தெரியாமல்
அப்பா வீட்டிற்கு அம்மா வருவது
இதுவே முதல் முறையென

புலியகுளம் கடந்து சுங்கம்
போகும்பொழுதெல்லாம்
அவரிடம் சொல்ல நினைப்பேன்

எல்லாம் ஒன்றுபோல் இருப்பதால்
எதுவென்று தெரிவதில்லை
அப்பாவின் குழிமேடு.

•

காற்றின் இரவாடை

நம்மிடம்
எல்லாவற்றிற்கும்
வார்த்தைகள் இருக்கின்றன

வார்த்தைகளுக்குப்
பின்னாலிருக்கும்
மாயங்களின் பெருவெளியில்
இதுவரை எவரும் பார்த்திராத
நிர்வாண பிம்பங்களாய்
அலைகிறோம்

விடியலின் சாட்சியமாய்
அதிகாலைகளில் பேசிக்கொள்ளும்
குருவிகளின் மொழிக்குப்பின்னும்
பறவைகள் வானமற்ற
பெருவெளியொன்றில்
ஆடை களைத்துப் பறக்கின்றன

காற்றின் இரைச்சலுக்குப்பின்
இன்னும் அகலமாகிறது
மற்றுமொரு பெருவெளி

விழிகளின் பிறப்பு
நிகழாத கணங்களில்
காற்றின் ஆடை களைகிறது.

•

சாட்சியம்

கொன்று தூக்கிலேற்றப்பட்ட
நொடிகளில்
வயிற்றுக்குள் அழுத சிசுவின் குரல்
அக்காவிற்கு மட்டுமே கேட்டிருக்கும்.

•

இயக்கமும் தயாரிப்பும்

வீதியில் விரித்து உட்கார
சாக்கொன்றை மடித்துக் கையில்

எடுத்துக்கொண்டு ராத்திரி
நாடகம் பார்க்க ஏரிமேட்டிற்குப் போவோம்

யார் யார் எந்தெந்த வேஷத்தில்
நடிக்கிறார்களென்று அம்மா கேட்க
முன்பே சொல்லியிருப்பார்
சௌந்தர் அண்ணன்

மோகன் அண்ணனுக்கு
கதாநாயகன் வேஷம்
பெரிய பாப்பாய் அண்ணனுக்கு
வில்லன் வேஷம்
ஒரே ஒரு கட்டத்தில் மட்டும்
பிரகாஷ் அண்ணன் வருவார்

முன் வரிசையில் உட்கார
இடம் கிடைக்காமல் நடக்கும் காட்சியை
ஏக்கத்தோடு எட்டிப் பார்ப்பேன் நான்

பூமியண்ணனும் வெங்கடேஷ் அண்ணனும்
மேடைக்கு இடதுபுறமிருக்கும்
பாரதிபுர உப்புத்தண்ணி டேங்கின் மீது
உட்கார்ந்து நாடகம்
பார்ப்பார்கள்

உட்காரக் கொடுத்தனுப்பிய
சாக்கை
மறந்து விட்டு வீடு வந்ததனால்
அம்மத்தாவிடம் வாங்கிய
அடிக்கு அளவே இல்லை

அத்தனை
நாடகங்களை
எழுதி இயக்கிய
சௌந்தர் அண்ணனால்
ஒரு நாடகத்தையும் கடைந்தெடுக்க
முடியவில்லை

லேத் இயந்திரம் இரும்பாலானது.

●

வினாக்குறி

ஆற்று வழி போனால்
சுடுகாடுகள் அனைத்தையும்
பார்த்துவிடலாம்

உயிரோட்டம் நின்றுபோன வாழ்வை
ஓடுகிற நீரருகில்
கிடத்திக்கொள்ள
காரணமும் இருக்கும்

கரைகளில் கொழுத்து வளர்ந்திருக்கும்
நாணற் புதரின் மேல்
அமர்ந்து கிறீச்சிடும்
குருவிகளுக்குப் புரிந்திருக்கும்
ஓயாமல் கேள்வி கேட்கும்
ஆற்றுக்கு
யுகங்களாய் கல்லறைகள்
சொல்லும் பதில்

இவ்வுரையாடலுக்கு
முடிவென்னவென்று
கேட்கும்பொழுதெல்லாம்
ஒவ்வொரு தொடுவானத்திற்கு அருகிலும்
நழுவி விடுகின்றன எல்லா ஆறுகளும்.

●

இறுக்கம்

தளர்ச்சியாய் இருந்தும்
குரல்வளையை நசுக்குகிறது
தூக்குக் கயிறு.

•

நிறமறியாத் தூரிகை

பனிசொட்டும் இலைகளோடு
மரம் ஒன்றை
வரைந்து வைத்த
ஓவியனிடம்
என்றேனும் ஒருநாள்
கேட்கத்தான் போகிறேன்

அவன் தூரிகையின் வழியே
செவிகளில் துடிதுடித்த
இலைகளின் மொழியில்

யாருடைய சிரிப்பும்
யாருடைய அழுகையும்
இருக்கும் ?

கோபுரத்தின் அருகே
புறாக்களின் சிறகடிப்பில்
எந்த கணம் ஒன்றில்
விண்ணின் நீள அகலம்
ஒளிந்திருக்கும் ?

அடர்ந்த மரமொன்றின்
கிளைகளைக் கழுவியபடி
ஓடும் ஆறு
தெரிந்து வைத்திருக்குமோ
பெருங்கடலின் ஆழத்தில்
விட்டுச் சென்ற அன்னைக்காக
பிள்ளைகள் அன்றாடம்
சிந்திய கண்ணீர் ?

வானத்தின் நீலத்தையும்
மண்ணின் பழுப்பையும்
தவிர்த்து
நீரின் உண்மையான நிறம்
எந்த வர்ணக் கோப்பையில்
இருக்குமென்று
ஒவ்வொரு தூரிகையும்
தேடவே செய்கிறது.

●

முதல் வெற்றி

ஒன்னாங் கிளாசிற்கு முந்தைய வகுப்பு
சுரேசும் சிவானும் நானும்
படித்த சங்கத்துப் பள்ளிக்கூடம்

அ, ஆ, இ, ஈ எழுதும் பயிற்சியில்
"இ" யை தவிர எல்லாம் எழுத முடிந்தது

சுழித்து சுழித்து சிலேட்டில்
எழுதிப் பார்த்து
மீண்டும் எச்சில் துப்பி அழித்து அழித்துத்
தோற்ற போதெல்லாம்
இஷ்டமில்லாத அந்த எழுத்தின் நெளிவு
சுழிவிற்குள்
தேய்ந்து போன சிலேட்டு பென்சிலுடன்
கரைந்து போனேன்...

முதன்முதலாய்
'இ' யைத் தவறில்லாமல் எழுதிக்
காட்டியது
நாலாங் கிளாசில்தான்

வாரம் ஒருமுறை வந்துபோகும்
அப்பா அம்மாவிடம்
அந்த இரவில் மட்டும்

போதுமா? போதுமா? என்பது போல்
இருபது முறைக்குமேல் அழித்து அழித்து
எழுதிக் காட்டினேன்

அப்பாவிற்கும் அம்மாவிற்கும்
கடலை நீந்திக் கடந்த நிம்மதி

இருந்தாலும்
இன்னும் இருக்கிறது
அந்த ... இ
என்
இரண்டு வயது இளவேனிலின்
பிஞ்சு விரல்களை மிரட்டியவாறு...

•

தேய்மானம்

கடைசியாய் வாசித்த
புத்தகங்களுக்குள் தென்பட்ட
கோணலான அடிகோடுகள்
வழியே தெரிந்தன
அப்பாவின் எண்ணப்படும் நாட்கள்.

●

ஆகஸ்ட் 6

ஆண்டிற்கொருமுறை
வைக்கப்படுகிற பூச்செண்டுகளால்
நடுங்குகின்றன
எங்கள் கல்லறைகளைச்
சுற்றி அரும்பியிருக்கும்
ஏக்கங்கள்.

•

நினைவு

சீழேறி ஒரு வருடமாய்த்
தூக்கம் பிடுங்கித்
துன்புறுத்திய வலது காலை
எடுத்த பிறகு
ஒன்றுக்கு ரெண்டுக்குப் போக
என்ன செய்வாளென்று
அண்ணனும் நானும்

பள்ளி ஆண்டுவிழாவிற்கு
குழந்தைகளுக்கு
அம்மா சொல்லிக் கொடுத்த
கோலாட்டமும் கும்மியாட்டமும்.

•

செல்வாக்கு

கல்லூரித் தேர்தலில்
மாணவர் பேரவைத் தலைவராய்
வெற்றி பெற்ற பின்
கொடுத்த வாக்குறுதிகளுக்காய்
நாங்கள் நடத்திய
வானவில்லின் மூன்றாம் நாள்
கடனுக்கு வாங்கிய "ஒயிட்" ரம்
முழு பாட்டில்களுக்குத் தவிர

இன்னும் தரவேண்டியுள்ளது
புலியகுளம் சேவியருக்கு
அடிதடியில் உடைந்துபோன
பத்து நாற்காலிகள்

ஒரே இரவில்
பந்தல் போட்டுக் கொடுத்த
குறிச்சி சசியின் பெரியப்பாவிற்கு
பாக்கி பணமும்.

எனக்குள் ஓடும் ஆறு

நாளை பேசத் தொடங்கியபின்
ஆறு ஒன்றை
காட்டச் சொல்வாள் என் மகள்

கரையோரம் அப்பத்தாவை
எரித்து முடித்தபிறகு
மொட்டை போட்டுக்கொண்ட
பெரியப்பா மூன்று முறை
முங்கி எழுந்து பெருமூச்சுவிட
அப்போது ஆறு இருந்தது

சாமி கும்பிட்டு முடித்த பிறகு
ஆற்றோரக் கருங்கல் படிகளில்
அமர்ந்து பொரிகடலையை
அசைபோட்டபடி
இடையிடையே மீன்களுக்கும்
இரை போட்டு கூட்டமாய் வரும்
மீன்களை வேடிக்கை
காட்டுவாள் அம்மா

எதைக்கேட்டோ அழுத என்னை
சமாதானப்படுத்த
கவனமாய் கைகளில் தாங்கி
என் கால்களை
மட்டும் ஆற்றில் நனையவைத்து
என்னை குலுங்கி சிரிக்க வைத்து
கூடவே தானும் சிரிப்பாள்

எங்கள் சிரிப்பொலி
கேட்டு புதர்களில்
கூடியிருந்த குருவிகள்
ஓடும் நீருக்கு மேல்
பறந்து
பக்கத்து மரக்கிளைக்குத் தாவ

இந்த ஆறு எங்கிருந்து
வருகிறதென்று பலமுறை
கேட்டுப்பார்த்தும்
மலையிலிருந்து என்று
அம்மா
சொன்ன பதிலில்
எனக்கு நிறைவேயில்லை

பாலங்களின்மேல்
பேருந்து செல்லும்
பொழுதெல்லாம் அடியில்
ஓடும் ஆற்றைப் பார்க்க
ஆசை வரும்

சன்னல் வழியே
எட்டிப்பார்த்தால்
எதையோ பார்க்காததை
பார்ப்பதாய் நினைத்து
பக்கத்திலிருப்பவர் அருவருப்பார்

அதனால் ஒருவருக்கும்
தெரியாமல் ஓரக்கண்ணால்
பார்த்துவிட்டு
நாகரிகத்தைக் காப்பாற்றிக்கொண்ட
நம்பிக்கையில்
என் பயணம் தொடர்வேன்

விடுமுறை நாட்களில்
ஊருக்குப் போனால்
நானும் ராமசாமியும்
ஆறு பார்க்க போவோம்

என் கால்சட்டை
நனையக் கூடாதென
முழங்காலிற்கு மேல்
வேட்டியை மடித்துக்கட்டி
தோளில் உட்காரவைத்து
இக்கரையிலிருந்து அக்கரைக்கு போவான்
ஆலாந்துறை ராமசாமி

பரிசலில் ஒரு நாள்
அழைத்துப் போன வேலுவும்
நீரில் துடுப்பிட்டபடியே
ஆட்காட்டி குருவி பற்றிய
கதைகள் சொல்வான்

எங்கள் நட்டாற்றுப் பேச்சிற்கு
பதில் சொல்லியபடியே
ஆட்காட்டி குருவியும்
ஆற்றுக்கு மேல் பறந்தபடி
எதையோ பேசும்

ஒரு நாள் விடுமுறை
கிடைக்கட்டும்
யாரிடமும் சொல்லாமல்
ஆறு பார்க்க போய்விடலாம்
என்று நம்பிக்கையோடு
நாட்களைக் கடத்திக் கடத்தி
இறுதியில்
ஏமாந்தே போனேன்

கரையில் நின்று
என்னை இடுப்பில்
உட்காரவைத்து
அம்மா காட்டிய ஆறு
இப்போது இல்லை

புதர்கள் சூழ்ந்த
சாக்கடையை காட்டி
எவ்வளவுதான் விளக்கினாலும்
ஏதும் புரியாமல்
திருதிருவென
விழிப்பாள் என் மகள்

ஆற்றை எப்படி
பேசிக்காட்டுவதென்று
நானும் குழம்பிப் போவேன்.

•

இசைதல்

இரும்புக் கம்பிகளை
அலகால் உரசும் சுகம்
பறப்பதில் இல்லையெனப்
பேசும் கிளிகளுக்குத்
தொங்கும் தசை
சிறகாலானது.

•

கல்லாலானது

மகளுக்கெதற்கு?
மகனுக்கே வீடு சொந்தமென்று
மாமாவின் பக்கம் சாய்ந்துவிட்ட
அம்மத்தாவுடன் அன்றோடு
பேச்சு வார்த்தையில்லை

ஊற்றும் மழையில்
பெட்டி சாமான்களோடு
முதல் வாடகை வீடு

புகைப்பிடிக்கும் பழக்கம்
தெரிந்து போன
பிறிதொரு நாளில்
அப்பா பிரவேசிக்காத இடத்திற்கு
இழுத்துப்போய்
வாய் ஊதிக்காட்டச் சொல்லி

"கெட்ட பழக்கமா பழகற ராஸ்கோலு"
ரகசியமாய் ஓங்கியறைந்த அம்மத்தாவிற்கு
மரணத்தின் முந்தைய நொடிகளில்
பாலூற்றி வந்தேன்
ரகசியமாய் அப்பாவிற்குத் தெரியாமல்.

●

அந்தி

துண்டு பிளேடுகள் சைக்கிள் செயின்
உருட்டுக் கட்டைகள் காவல் நிலையம்
மருத்துவமனை என்று
எல்லாம் முடிந்த மாலையில்
சன்ரைஸ் விடுதியில்
கோப்பைகளை நிரப்பிய
சுதிருக்கும் எனக்கும்
மஞ்சள் பூ மெத்தை விரித்திருந்தது
கல்லூரி மரம்.

●

பிரிவு

எழிலரசி இளவேனில் தமிழ்வாணன்
நிதர்சனா... என்று அனைவரோடும்
விளையாட்டுமுறைப் பள்ளியில் படித்த
ஹிந்தி மழலை பேசும் பிரதீக்
நாளையே பீகார் போகிறான்
நிரந்தரமாய்த் தங்கிவிட

நேசத்தின் ஈரம்
காயாமல் இருக்கும் நம்பிக்கையோடு
கடைசி முத்தமிட்டு வழியனுப்பினார்
ஹேமலதா டீச்சர்.

●

நிழல்

சபிக்கப்பட்ட
வனிதையின் முகம் காண
என் பயணம் தொடர்ந்தது

இந்த
ஏழு மலைகளில்
ஏதோ ஒரு மலையில்தான்
அவள் இன்னும் வாழ்கிறாள்

நிறைவேறாக் காதலின்
வேதனையை எவரிடமும்
சொல்லமுடியா வண்ணம்
ஒவ்வோர் இலையின்
கடைசி வார்த்தையிலும்
சோகத்தைப் பாடுகிறாள்

பிரம்மாண்ட மலைகளின்
மேல் நின்று
காதலிக்கு நான் கூறும்
வாக்கியத்தின்
கடைசி வார்த்தைக்குள்
ஒரு முறை அவளின் உயிர்
சிறகடித்து ஓய்கிறது.

●

இருப்பு

இலட்சங்கள் கொடுத்து
வாங்கிய நான்கு சக்கர வாகனம்

எச்சங்களைத் தவிர்க்க
வெட்டியெறியப்பட்ட மரத்தைத்
தேடியவாறு
சுவர் நெடுக பறவைகள்.

●

நம்பிக்கை

பஸ் வருவதற்கு முன்பே
வலி அதிகமாகிவிட்டது
இருள் விழுவதற்கு முன்
ஆஸ்பத்திரி போயாக வேண்டும்.

பனை மரங்கள் சூழ்ந்த
வெட்டவெளியோரம்
ஒரு சாலை

அக்காவை வெளியிட
துடித்துக் கொண்டிருந்த
அம்மாவை
உள்ளே பக்குவமாய்
அழைத்துச் சென்றனர்
அம்மத்தாவும் அத்தையும்

வெளியே கணேஷ் பீடியை
உறிஞ்சியபடி
எதையோ யோசித்துக் கொண்டிருந்தார்
அப்பா

அக்காவின்
முதலும் கடைசியுமான அழுகுரல்
மௌனம் ஒன்றின்மேல்
மோதி ஓய்ந்து போக

வீசிக்கொண்டிருந்த காற்றை
வெறித்துப் பார்த்த அத்தைக்கு
இன்னும் கோபந்தான்
அக்காவை அடித்த காற்றின் மீது.

●

இரட்சிப்பு

இருபத்தியாறு நாட்களுக்கான
பாவங்களின் குறிப்பை
நான்கு நாட்களில் அலசி ஆராய்ந்து
தீர்ப்பெழுதும் திறன் இறைவனுக்கில்லை
என்பதைத் தெரிந்து கொண்டபின்
சனிக்கிழமை வரை
நாங்கள் பயன்படுத்தும்
துப்பாக்கிகள்
ஞாயிற்றுக்கிழமைகளில்
சிலுவைகளாகின்றன.

(அ. மார்க்ஸ் - க்கு)

●

தரகு

நானின்று வசிக்கும் வீட்டில்
காற்றின் முகம் காண
பூக்களின் நிழலாட்டம்

எனக்கு நான்
சொந்தமாய் இருந்த யுகமொன்றில்
என்னிடம் இல்லை
இத்தனையும்
துணைவி மகள் வீடு

எங்கே எப்பொழுது கூடுமென்று
ஒருவருக்கும் தெரியாத
சந்தை ஒன்றில்
எல்லாவற்றையும் வாங்கச்
செலவழித்த என்னை
இன்றும் தேடிச் சலிக்கிறேன்

எங்குமே கிடைக்காத என்னைத்
தின்று தீர்க்கிறது
வயிற்றுருவம்
கொண்ட மிருகம்.

●

நன்றியுணர்வு

அண்ணனின்
பள்ளி முன்னேற்றத் தேர்ச்சி அட்டையில்
காப்பாளர் கையொப்பமிடும்
இடத்தில் "காளியம்மாள்" என்று
பேனாவைக் கடப்பாரை போல்
இறுகப்பிடித்து
அண்ணன் கற்றுக் கொடுத்த
கையெழுத்தைப் போடும் அம்மத்தாவிற்கு
முதல் மதிப்பெண்களாகத் தெரியும்
எல்லாப் பாடப் பெயர்களுக்குக்
கீழேயும் ஒன்று போல்
சிவப்பு மையால் எழுதப்பட்ட
'a' என்ற எழுத்து.

(R. மணிமேகலைக்கு)

சான்று

மகுடேசுவரனின்
சென்ட் ரப்பரை
நான் திருடியதாய் நினைத்து
முழிகளை வீங்கவைத்த
இரண்டாம் வகுப்பு மிஸ்ஸிற்கு
குற்றத்தை நிரூபிக்கக் கிடைத்த
ஒரே தடயம்
என் கறுப்பு முகம்.

•

பறவைகளை எதிர்கொள்தல்

நான் மீண்டும்
தொடங்கிய இடத்திற்கே
வந்து சேர்ந்தேன்

இடைநேரத்தில்
தொடர் வண்டிப் பயணத்தில்
பின்னோக்கிச் செல்லும்
மரங்களைப் போல்
நினைவின் ஊடே அனுபவித்தவை

துவக்கத்திற்கும் முடிவிற்குமான
கோடுகள் எந்தப் புள்ளியில்
இணைகின்றன
என்ற கேள்விக்கு
இன்று விடைகிடைத்தது

இதே இடத்திலிருந்து
நாளை துவங்க வேண்டும்

என் இறுதி ஊர்வலம்
அந்தியில் நிகழ்கிறது
தொடுவானத்தின்
பார்வைக்கு ஏற்றவாறு.

●

வரிசை

பேருந்து நிலையத்தில்
"திருடர்கள் ஜாக்கிரதை"
எச்சரிக்கும் தொலைக்காட்சிப்
பெட்டியில் அடுத்தடுத்து
ஜொலிக்கின்றன
நகைக்கடை விளம்பரங்கள்.

●

பெயர் முதலெழுத்து

சாவிற்கு வந்தோரின் கூட்டத்தில்
தாயைவிட்டு வேறொருத்தியை
மணந்துபோன தந்தை
எங்கேனும் இருப்பாரோ என்று
தேடுகிற இறந்த மகளின்
ஏக்கம்
வாசனையாய்ப் பரவுகிறது.

•

நாட்காட்டி

ஒரு மாதத்திற்கு
முப்பது முறை
எண்களை மாற்றி மாற்றி
வருகைப் பதிவெடுக்கும்
காலத்தின் முன்
சொல்ல மறந்து போகிறேன்
"உள்ளேன் அய்யா".

•

பால்யம்

தொட்டு விளையாட்டின் பொழுது
ஏறிய நெருஞ்சி முள்ளை எடுப்பதற்கு
வீட்டின் முன் நிரம்பியிருக்கும்
எருக்கலைச் செடியிலிருந்து
இலைகள் பறிப்போம்

முள்ளை எடுத்துவிட்ட நம்பிக்கையில்
அடுத்த நாளும் குளத்து மேட்டில்
எங்கள் ஆட்டம்

வீட்டில் வாளி நிறையத்
தண்ணீர் இருக்கும் என்றாலும்
அந்த நெருஞ்சிப் புதர் சூழ்ந்த
குளத்தில்தான்
அரைக்கால்ச் சட்டையை
அவிழ்த்துப்போட்டுக் குதிப்போம்

எங்கள் மீது எங்கள் குளத்திற்கு
அப்படியொரு தாய்மை
இருந்ததால்தான்
எங்கள் நிர்வாணம்
ஒருநாள் கூட
நீரை அசுத்தப்படுத்தியதில்லை.

விளையாட்டை முடித்துவிட்டு
முகம் கழுவி வாய்கொப்பளிக்க
ஓடைக்கு வருவோம்.

கொப்பளித்த நீரை
ஒருவர் முகத்தில்
ஒருவர் துப்பிக் கலகலப்போம்

இருகை சேர்த்து நீரை அள்ளுகையில்
மீன்களையும் சேர்த்தள்ளுவோம்

கைகளில் நிரம்பிய நீர்
வடியும் முன்
எங்கோ ஓடிப்போய்த்
தேங்காய்த் தொட்டியொன்றைத்
தேடியெடுத்து வருவான் சீனி

விழியின் அருகே
மீன் வேடிக்கை பார்த்துவிட்டு
இரவின் முற்றத்தில் வீடு சேர்வோம்

இப்படியிருந்த எங்கள் ஓடையில்
ஒரு நாள்
மனித உறுப்புகள்
மிதந்து வந்ததாய்ச் செய்தி

அன்றிலிருந்து நாங்கள்
ஆடிக்களித்த ஓடை
பக்கத்து மருத்துவமனையின்
குப்பைத் தொட்டியானது

எங்கள் ஓடைக்குக்
கருப்பு நிறம் கிடைத்தது

நெருஞ்சிப் புதர்கள் சூழ்ந்த
எங்கள் குளமும்
ஒரு நாள் குடியிருப்பானது

தொட்டு விளையாட்டிற்கும் நீந்துவதற்கும்
இடமின்றிப்போனாம்

நீந்துவதற்கும் ஓடுவதற்குமே இருந்த
எங்கள் கைகளும் கால்களும்
இறுதியில்
இயந்திரங்களை இயக்கும்
இயந்திரங்களாயின

"தொட்டால் குத்திவிடுவேன்"
என்று செல்லமாய் மிரட்டிய
நெருஞ்சிப் புதர்கள்
இன்று
மனிதர்களுக்குப் பயந்துபோய்
எங்கோ மறைந்துவிட்டன

மறைந்து போன நெருஞ்சிப் புதர்கள்
மீண்டும் தழைக்கின்றன

நடுவே தெரிகின்றன
எங்கள் குளமும் ஓடையும்.

(19-10-2003, கோவை
நெருஞ்சி இலக்கிய முற்றத்தின் தொடக்கவிழா *)*

வசதி

மனைவியையும் குழந்தையையும்
உட்கார வைத்துக்கொண்டு
பைக்கில் என் அதிவிரைவுப் பயணம்

பாலித்தின் பையிற்குள்
நண்பனின் திருமணத்திற்காகப்
பூச்செண்டு.

●

உரு மாறாட்டம்

இலையுதிர் காலம்
குண்டு விளையாட்டின் இடையிடையே
ஆலம் பழம் பொறுக்கித் தின்போம்

சிக்கியின் பம்பரத்தை
புலியகுளம் வரையில்
கொண்டு செல்வோம்

கரம் வரையில்
நொண்டியடித்து வந்து சேர்வான்

சாட்டை சுற்றும் வேகத்தில்
அவிழ்ந்து விழப்பார்க்கும்
பின்னூசி குத்தாமல்
இழுத்துச் சொருகிய காக்கி டிரவுசர்

முடிவெட்டிக்கொள்ள அப்பா கொடுத்த
ஒன்றரை ரூபாய்
சுண்டி அமித்தி விளையாட்டில்
பறிபோகும்

வெண்கலச் சட்டி நிறைய
யாருக்கும் தெரியாமல்
அட்டாறியில் பதுக்குவோம்
வண்ண வண்ணமாய்
ஜெயித்த குண்டுகள்

அடிக்கடி
கிடா வெட்டு வரும்
அத்தை மாமா
பெரியம்மா சின்னம்மா
தாத்தா பாட்டியோடு
மாரியாத்தாள் கோயில் திடலில்
கறியும் சோறுமென விருந்து

பூசாரி குறி சொல்வார்...
ஆத்தாளுக்கு கோழி அடித்து
குழம்பு வைப்போம்

பூசாரியும் எங்களுடன் சேர்ந்து
புசித்து மகிழ்வார்

அவரும் உறவுக்காரர்
அம்மா அடிக்கொருமுறை
சொல்லும்

இருந்தது
சொல்லித் தெரியாத உறவு
எங்களுக்கும் மாரியாத்தாளுக்கும்.

●

சுவர்

கருப்பு நிறத்திலான
அஞ்சலிச் சுவரொட்டியின் மீது
சிரிக்கிறார்கள் பலவண்ணங்களில்
மணமகனும் மணமகளும்.

●

பகல் பொழுது

இறந்துபோய் அய்ந்து
வருடங்களான பின்
மீண்டும் பதினொரு மணிவாக்கில்
அண்ணன் உள்ளிட்டோர்
மருத்துவமனைக்கு
அம்மாவை அழைத்து வந்தனர்

சுருங்கிப்போன கன்னங்களோடும்
சூம்பிப் போன கால்களோடும்
தன் வாழ்நாளில் இருந்ததைப் போலவே
இன்றும் இருந்தாள்

எங்கள் மூவரைத் தவிர
அனைவரும் நிழல்களாய்
வந்து போய்க் கொண்டிருந்த
மருத்துவமனைக்குள்
அன்றாட அவசரங்களுடன்
புறப்படும் தருணத்தில்
துடித்துக் கொண்டிருந்த என்னை

இனி தொந்தரவு செய்யக் கூடாதென
முடிவெடுத்து
ஏதோ ஒரு மருத்துவமனையில்
இன்றும் அவள் இருக்கக் கூடும்
நிழல்கள் சூழ.

•

நகர்தல்

நேற்றுவரை ஆடிய ஊஞ்சல்
நாளை கிடைக்காது என்பதை
அறியாமல் சிரித்துப் பேசுகிற
குழந்தைக்குப் பதில்களாய்
நிக்கோடின் இதழ்களில்
பிறக்கும் சடலங்கள்.

●

உறவு

அந்திக்குப்பின் நிகழப்போகிற
தவிர்க்கமுடியாத
பிரிவின் வேதனைக்கு
அஞ்சி அஞ்சி
என் குழந்தையைப் போல்
என்னையே தொற்றித் திரிகிறது
பகல் முழுக்க என் நிழல்.

●

கடைசி அறை

அவள் உருட்டும்
துளியும் கறையற்ற
வெண்ணிற விழிகளுக்குள்
இன்றும் நடந்து போகிறேன்.

இணையதளத்தில்
ஒவ்வோர் இரவும்
அவள் காணும்
நிர்வாணப் படங்களைத்
தேடிப்பார்க்கிறேன்

நாங்கள் விடுதலையாகிற
ஞாயிற்றுக்கிழமைகளில்
கொஞ்சிப் பேசுகிற
அவளது உதட்டில்
நேற்றருந்திய
மதுவின் கடைசித்துளி

மசாஜின்போது விரல்ரேகை
பதிந்த சுகத்தை
தன் நினைவின் கடைசி அறையில்
அவள் ரசித்துக்கொண்டிருக்கிறாள்

நெருங்கமுடியாதவாறு
முன்னே உயர்ந்து வளர்கிறது
கட்புலனாகாச் சுவரொன்று

ஊன்றுகோலின்
துணையோடு முன்னேறுகிறேன்

சிட்டுக்குருவிகளின் ஆதரவுடன்
சுவற்றிற்கு அப்பாலிருந்து
சிரிக்கிறாள்.

●

இயக்க இயல்

வாழ்வின் ஏரிகளுக்கு
மண்புழுவாய் எடுத்துச் செல்லப்படுகிறேன்

எச்சரிக்கும் மொழியற்ற நானும்
புரியும் திறனற்ற மீனும்
முன்பே பேசிக்கொள்ள முடியாதவாறு
செய்யப்படுகின்றன தூண்டில்கள்.

•

தொடர்ச்சி

பெருங்கடலின் ஆழத்திற்கோ
மலையின் உச்சிக்கோ
இழுத்துச் செல்லும்
உன் அப்பாவின் ஆவியென்று
ஹேம்லெட்டிற்கு ஹொரேஷியோ
சொன்ன எச்சரிக்கையைக் கடந்தும்
அப்பாவின் ஆவியோடு பயணிக்கிறேன்

கூட்டிச் செல்கிறார்
கையில் காசிருக்கும் பொழுதெல்லாம்
கோட்டைமேட்டிலும்
உக்கடத்திலும் நீண்டிருக்கும்
பழைய புத்தகக் கடைகளுக்கு.

காம்புகளிலிருந்து

காலமெல்லாம் தாங்கி நிற்கிற
மண்ணை
ஆண்டிற்கு ஒருமுறை
மலர்களாலும் இலைகளாலும்
கௌரவிக்க மறப்பதில்லை
உலகின் எந்த மரமும்.

●

கலிவரின் பயணக்குறிப்புகள்

எட்டாம் வகுப்பு... தென்னை மரங்கள் சூழ்ந்த பள்ளி மைதானத்தின் மூலையொன்றில் அமர்ந்து ஒரு நண்பனின் காதல் கடிதத்தை எழுதி முடித்துவிட்டு அடுத்த நாளும் நான் தேர்விற்குப் பயன்படுத்திய "கேம்லின்" பேனா இன்று எங்குமிருக்க வாய்ப்பில்லை ஒன்பதாம் வகுப்பு நாட்களில் பேனாவிற்குப் பதிலாக "பனாமா" பிளேடைக் கொண்டு என் இடது கையில் நானே எழுதிக்கொண்ட ஒரு பெண்ணின் பெயரிலிருந்து களைகளாய் முளைக்கத் துவங்கின எழுத்துக்கள். பரண்மேல் ஒளித்து வைத்திருந்த நாற்பது பக்க நோட்டிற்குள் ஒரு சிறுவனின் மனச்சுமைகள்... அப்பாவின் கைகளுக்குக் கிடைத்தபொழுது முந்தைய தீபாவளிக்கு வாங்கிக் கொடுத்த "ஆக்ஷன்" சப்பாத்துக்கள் அதன்பின்னர் எதற்கும் பயனற்றுப் போய்விட்டன.

தோழியொருத்தியின் மூலமாக தினமொரு காதல் கடிதம்... ஓராண்டுவரை பதிலுக்காகக் காத்திருந்தும் இறுதியில் ஒரு மாலைப் பொழுதின் முடிவில் நேரடியாகவே கேட்க முடிந்ததன் விளைவு எனக்குத் தங்கை இல்லாததின் குறை தீர்ந்து போனது.

பரிணாமத்தின் அடுத்த நிலையில் எனக்குக் கிடைத்த முதல் வெற்றி.... எனக்கெழுதப்பட்ட அவளின் கடிதங்களை அண்ணன் கைப்பற்றியபொழுது ட்யூசன் முடிந்து வீடு வராமல் அடிக்கு பயந்து போய் காந்திபுரம் "பிரசன்னலட்சுமி பேக்கரி" திண்ணையில் அனுபவித்த முதல் திறந்த வெளி உறக்கம் எப்படியிருந்தாலும் எல்லாம் எழுதியதன் விளைவு. இரவெல்லாம் நண்பர்களின் வீட்டுக் கதவைத் தட்டிப்பார்த்தும் எங்கே போயிருப்பானென்று கண்டுபிடிக்க முடியாமல் தவித்த அண்ணனும் அம்மாவும் "என்னமோ பண்ணித்தொலை" என்று வாய்மொழியால் ஏறக்குறைய ஓர் உரிமத்தையே வழங்கிவிடக் காரணமாய் அமைந்தன என் விடலைப் பருவத்தை வெளிப்படுத்திய கிறுக்கல்கள்.

பெற்றோர்களுக்குத்தான் பிரச்சினை என்றாலும் ஆசிரியர்களுக்கு மட்டும் எப்படியாம்? பள்ளி நாட்களிலேயே புகைப்பிடிக்கும் பழக்கம். "ஒரு தடவை தொட்டா விட முடியாது

தெரியுமா ஸ்டுப்பிட்" கன்னத்தில் ஓங்கியறைந்த பயாலஜி மிஸ் திருமதி. ஏஞ்சலா ராஜ்குமாரின் கைகளுக்குள் என் மேலிருந்த அக்கறை அர்த்தமற்றதாகவே ஆகிவிட்டது.

கவிக்குயில் சரோஜினியின் "பல்லக்குத் தூக்கிகள்" (Palanquin bearers) கவிதையைப் பள்ளி முதல்வர் திருமதி. மேபிள் சார்லஸ் ஒரே முறை வகுப்பில் நடத்தியிருந்தாலும் ஒரு முறைகூட வரிகளாய்ப் படித்துப் பார்க்காத நான் இன்று கேட்டாலும் அழகுடன் விளக்கிச் சொல்வேன். அந்நியம் நிறைந்துபோன மெட்ரிகுலேஷன் வாழ்வில் மிக இயல்பாய் தமிழை வாசிக்கத் தெரிந்தவர்கள் நானும் என் நெருங்கிய நண்பன் பாலாஜியும் தான். தனிப்பயிற்சி வகுப்பில் எழுத்தாளர் ஜெயகாந்தனின் வகுப்புத்தோழர் மறைந்த ஆசிரியர் திரு. சற்குணம் நடத்திய ராபர்ட் பிரௌனிங்கின், "தி இன்சிடென்ட் ஆஃப் தி பிரெஞ்சு கேம்ப்" (The incident of the French camp) கவிதையில் மாவீரன் நெப்போலியனிடம் வெற்றிச் செய்தியை முதன்முதலாய் சொல்லிவிட்டு இறந்து போன அந்த இளைஞன் நான் தான்.

கவிஞர் கே.ஆர். பாபுவிடமும் கவிஞர் கலைமாறனிடமும் யாப்பிலக்கணம் கற்றுக்கொண்டிருந்த நாட்களில் குறிப்பேடுகள் இரவெல்லாம் நிரம்ப, இனியும் அனுமதித்தால் அடுத்து கீழ்ப்பாக்கம் தான் என்று பயந்துபோன அண்ணனும் அம்மாவும் என் இரும்புப் பெட்டியைப் பூட்டிய நிம்மதியில் இருக்க சிலநாட்கள் நான் நா அறுபட்ட குயிலாய் இரவு 9 மணிக்கெல்லாம் படுக்கைக்குச் செல்ல வேண்டிய பெருந்துன்பத்தை அனுபவிக்க வேண்டியிருந்தது.

ஆங்கில இலக்கியம் படித்தாலும் தமிழ் மன்றச் செயலர் தேர்தலில் வெற்றி. அப்பாவிற்கும் அம்மாவிற்கும் வாழ்நாள் கூடியது. "விழுதுகள் - 94" தமிழ் மன்ற விழாவில் ஒருமுறையே சந்தித்தபோதும் "மீனாட்சி" என்று உரிமையோடு அழைக்கிற எழுத்தாளர் பிரபஞ்சனின் இதயம் பெரியது. முகதாட்சண்யம் ஏதுமின்றி விழாவில் எல்லோர் முன்னிலையிலும் "மின்னல் வேகத்தில் கவிதை எழுதுகிறான்" என்று என்னை பாராட்டிய பொழுது, புகழிற்குப் பொருந்தாத நான் வெட்கத்தால் தலைகுனிந்தேன். பேராசிரியர் முனைவர் கி. சுப்பிரமணியம் மகிழ்ந்தார்.

கோவை அரசு கலைக் கல்லூரியின் சுவர்களில் எழுதப்பட்டிருந்த தேர்தல் பிரச்சார வாசகங்களிலிருந்து எனதொரு கவிதையைத் தேடிக் கண்டுபிடித்த கவிக்கோ அப்துல்ரகுமான் தான் கலந்து கொள்ளும் கூட்டங்களிலெல்லாம் அதை மேற்கோளிடுவதாய் ஒரு முறை என்னிடமே கூறியதை நினைக்கும்பொழுது சிறகடித்துப் பறக்கிறேன் நான்.

அருவிக் கவியரங்கம், நிலாக் கவியரங்கம் என்று திருமூர்த்திமலை, முதுமலை என்று அழைத்துச் சென்ற கோவை இலக்கிய வட்ட நிறுவனர், இன்று பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் வானம்பாடிக் கவிஞர் திரு. முல்லை ஆதவன் அவர்கள் மேடையை எங்களுக்குக் கொடுத்துவிட்டு ஓர் ஒருங்கிணைப்பாளரின் எளிமையோடும் கடமையுணர்வோடும் அரங்கின் கதவருகே நின்று கொண்டிருக்கும் காட்சி ஏனோ மனதைவிட்டு இன்னும் அகல்வதில்லை.

இன்று பாரதியார் பல்கலைக்கழகத்தின் பதிவாளராய்த் திகழ்கிற முனைவர் சி. சுப்பிரமணியம், கோவை மாநகராட்சிக் கலையரங்கில் நடைபெற்ற கவிஞர் சிற்பியின் தலைமையிலான ஒரு கவியரங்கிற்கு என்னைப் பரிந்துரை செய்ததை இன்னும் மறவாதவனாய் இருக்கிறேன்.

அரசு கலைக் கல்லூரியில் **(1994)** மாணவர் பேரவைத் தலைவராய் நான் வெற்றி பெற்ற பின்னர் மாணவர் போராட்டம், காவல்நிலையம், நீதிமன்றம், மருத்துவமனை என்று அலைவுகளில் கழிந்த ஓராண்டில் என்னிடம் இரண்டு கவிதைகள் இருந்தன. வாக்களிப்பு முடிந்த அடுத்த நிமிடத்தில் "வெற்றி உங்களுக்குத்தான்" என்று தன் கூந்தலில் சூடியிருந்த ஒற்றை ரோஜாவை எனக்குப் பரிசளித்த அந்த பெயர் தெரியாத தோழியின் மனம்; வெற்றி பெற்ற அடுத்த நிமிடத்தில் "வாழ்த்துக்கள்" என்று நண்பன் சிவஅருணா தன் இரத்தத்தால் எழுதிக்கொடுத்த ஒரு துண்டுக் காகிதம். இன்று நினைக்கும்பொழுது எப்படித் தோன்றினாலும் அன்றைய நொடிகளுக்கான மரியாதையை இன்றும் செலுத்த வேண்டியவனாய் உள்ளேன்.

" The Wind and a leaf" உத்திரப்பிரதேசத்திலிருந்து அச்சாகி அஞ்சலில் வந்த பொழுது எனது ஆங்கில எழுத்துக்களை முதலில் அச்சில் பார்த்து என்னைவிட இரட்டிப்பாய் மகிழ்ந்தவர்கள் நண்பர் திலகேசுவரன், இருகூர் பாண்டியன், சரவணகுமார், இரத்தினபுரி செந்தில் மற்றும் கொங்கு நாடு கல்வியகம் முத்துக்குமார்.

இன்று உண்மை புரிந்து எவ்வளவுதான் வருத்தப்பட்டாலும், காதல் திருமண வாழ்வின் முதிர்ச்சியற்ற துவக்க நாட்களில் என் கடந்த காலக் காதல்களின் அடையாளங்கள் அசுத்தமாய் உறுத்துவதாய் வருத்தப்பட்ட, பெற்றோர்களைக் கடந்து என்னோடு வாழ்க்கைத் துணையாய் வந்துவிட்ட, என் மனைவியை ஆறுதல்படுத்த வீட்டு முற்றத்தில் எரிந்து போன பத்தாண்டுகளாய் இரவெல்லாம் விழித்து, நான் எழுதிய 30ற்கும் மேற்பட்ட குறிப்பேடுகளில் பொதிந்த கவிதைகள் ஏவாளை திருப்திப்படுத்தியதால் இழந்த சொர்க்க மொன்று இன்று பிரதிகளாய்க் கிடைத்தாலும் ஆதியில் ஆகாயம் தழுவிய பறவைகளும், டைகிரிஸ், யூப்ரேட்ஸ் ஆறுகளின் ஓட்டமும், ரோஜாத் தோட்டங்களும் இப்பிரதிகளில் இல்லை. முதல் பாவம் புரிந்ததற்காய் ஈதேன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டு தனியாய் நான் என் தேவனாகிய கவிதையிடம் இன்றும் மன்னிப்புக் கோருகிறேன். இனிமேல் மீண்ட சொர்க்கத்தையோ ஷெர்லாக் ஹோம்சின் மறுபிறப்பையோ எழுத முடியாதென்பது கசப்பான ஓர் உண்மை.

ஆனாலும் நானொரு மீண்ட சொர்க்கத்தை எழுதத்தான் வேண்டுமென்று இறைவனை ஏமாற்றியும் எனக்காக ஒரு "பேபல் கோபுரத்தை" கட்டிக் கொண்டுதான் இருக்கிறார், புரியாத காலத்தில் பெருந்தவறொன்றைச் செய்துவிட்ட என் வாழ்க்கைத் துணைவி அ. ஜானகி. கல்லூரி நாட்களில் "சித்ரா"விற்கும் பேரூருக்கும் நடந்த எங்கள் அன்றாடப் பேருந்துப் பயணங்களில் என்னோடு வெண்பா யாத்தலில் ஆர்வத்துடன் பங்கேற்றுப் படைத்தவர். என்னைக் கவர்ந்த கட்டுரையாளர். எனக்கான சொர்க்கத்தை இழக்கச் செய்ததன் உறுத்தலோடு இன்று கவிதையிடம் அவர் கோரும் மன்னிப்பும் எனதைப் போன்றதே. நரகத்தில் தானிருந்தாலும் என்னை ஈதேன் தோட்டத்திற்கு அனுப்பி வைக்கிற தியாகத்தை அவரிடம் பார்க்கிறேன்.

வாழ்க்கைக் கடல் நீந்த ஒரு சுயநிதிக் கல்லூரியில் விரிவுரை யாளராகப் பணிசெய்வது தவிர என் வாசிப்புகளுக்காகவும் நண்பர்களின் சந்திப்புக்களுக்காகவும், குழந்தை இளவேனிலைச் சுமப்பதைப் போலவே இல்லப்பணிகளையும் இன்பமாகச் சுமந்து கொள்பவர். இரவெல்லாம் கண்விழித்து நெருஞ்சிக்கான கட்டுரைத் தயாரிப்பில் நான் முழுமையாக ஈடுபட என்னோடு இருக்க வேண்டுமென அழும் பிள்ளையையும் முடிந்த அளவிற்கு சமாதானப்படுத்தி எனக்கொரு மீண்ட சொர்க்கத்தை உருவாக்கித் தரும் பிடிவாதத்தை அவரிடம் உணர்கிறேன்.

கல்லூரிக் காலங்களில் ஒரு முறை கூட வளாகத்தில் பேசிக்கொள்ளாத நாங்கள் இருவரும் உயிர்த்துக்கொண்டிருந்தது என்னவோ கடிதங்களுக்குள்ளேதான். நான் எழுதும் காதல் கடிதங்களை வீட்டிலிருப்போர் படித்துவிடக்கூடாதென என் ஆங்கில எழுத்தாற்றலை வளர்த்துக் கொடுத்தவர். அச்சிற்கு வரமுடியாத படைப்புகளாய் நாங்கள் எழுதிக்கொண்ட காதல் கடிதங்கள் ஒரு மூட்டையாய் கட்டப்பெற்று பரண்மேல் பத்திரமாய் வைக்கப்பட்டி ருக்கின்றன. வாடகைக் குடியிருப்பாளர்களாகிய நாங்கள் ஒவ்வொருமுறை வீடு காலிசெய்யும் பொழுதும் எதை மறந்தாலும் குறிப்பாக அந்தக் கடித மூட்டையை கவனமாய் எடுத்துச் செல்கிறோம். கடிதங்களுக்குள் தலைமறைவாய் வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த "நாங்களை" என்றும் தொலைத்து விடக்கூடாதென்ற நேசத்துடன்.

நான் எழுதும் படைப்புகளுக்குள் ஏதோ ஒன்று இருப்பதாய் உணர்கிற என் 3 வயது மகள் இப்பொழுதெல்லாம் எழுதும் பொழுது எனக்கு இடையூறு தருவதில்லை. இருந்தாலும் அவளின் பிஞ்சு இதயத்திற்குள் கனமாய் இறங்குகிற இக்கருத்தோடு எனக்கு உடன்பாடில்லைதான். எழுதி முடித்த அடுத்த நிமிடங்களில் நானும் அவளின் சக தோழனாய் மாறி விளையாட்டில் ஈடுபடுவதிலும் கேட்ட பொருட்களை வாங்கித் தருவதிலும் அவளிடம் எனக்கு என்றேனும் மன்னிப்புக் கிடைக்கும் என்பது எனது நிச்சயமற்ற நம்பிக்கை.

இதுவரை பதினேழு திங்கள் சந்திப்புகளுக்கும், இனிவரும் சந்திப்புகளுக்கும் சிறிதும் மனம் கோணாமல் தன் பயிற்சி அரங்கைப்

பயன்படுத்தக் கொடுத்திருப்பதின் மூலமாக எங்களை ஊக்குவிக்கும் சிபி ஐ.ஏ.எஸ். அகாதெமியின் இயக்குனர் மதிப்பிற்குரிய சகோதரர் முனைவர் திரு. அரங்க. கோபால் அவர்களின் நேசம் வானத்தைப் போல விரிகிறது.

நெருஞ்சி இலக்கிய முற்றத்தைப் போலவே தமது கல்லூரிக்கும் ஓர் இலக்கிய அமைப்பு வேண்டுமென்று அதன் முதல் கூட்டத்தில் என்னைச் சிறப்புரையாற்றச் செய்த கோவை - நீலம்பூர் மகாராஜா கலை அறிவியல் கல்லூரி முதல்வர் திரு. லோகநாதன், ஆங்கிலப் பேராசிரியர் திரு. விஸ்வநாதன் என்றும் நன்றிக்குரியவர்கள்.

நான் பயில்கிற காலத்தில் இல்லையென்றாலும் பேராசிரியர் பாலுவின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கில மொழியியல் பேராசிரியர் திரு. ஜான்பிரிட்டோ என் உயர்கல்விக் காலங்களில் ஆங்கில மொழியியலை ஆர்வத்துடனும் அக்கறையுடனும் கற்றுக்கொடுத்தவர். ஓய்வு பெற்றபொழுதும், சமீபத்தில் நிகழ்ந்த பெங்களூர் சந்திப்பிலும் ஏராளமான ஆங்கில மொழி இலக்கிய நூல்களைப் பரிசளித்தவர். அடுத்த சந்திப்பிலும் எனக்காக இன்னும் நிறையப் புத்தகங்களை வைத்திருப்பார்.

யாரோ விட்டுச்சென்ற **2000** ரூபாயை வழியில் கண்டெடுத்து முடிந்தளவு விசாரித்தும் முகம் கண்டுபிடிக்க முடியாமற் போன பொழுது தனக்கென ஒரு ரூபாயைக் கூட வைத்துக்கொள்ளாமல் **2000** ரூபாய்க்கும் எனக்குப் புத்தகங்கள் வாங்கிக் கொடுத்த நண்பர் திரு. வேணுகோபால் அவர்களும் அரசு கலைக்கல்லூரியில் எனக்கு சில ஆண்டுகள் முன்பு படித்த மாணவர். தான் தொழிலுக்கென வாங்கிய உருப்பதிவுப்பெட்டிக்கு (Video Camera) திரும்பச் செலுத்த வேண்டிய நிலுவைகள் நிறைய இருந்தபொழுதும் நெருஞ்சியின் சிறப்பான நிகழ்வுகளைப் பதிவு செய்து வைத்திருக்கிற நண்பர் மோகன் என்ற வெற்றித் தமிழன். என் குரல்வளைக்குள் பேச்சு நின்றுவிட்ட தினமொன்றில் ஒலிப்பதிவி உள்ளிட்ட பிற சாதனங்களையும் ரூபாய் **3000** வரை செலவிட்டுப் பெற்றுக் கொடுத்தவர் இன்று அமெரிக்காவில் கணிப்பொறியாளராய்ப் பணிபுரியும் மரியாதைக்குரிய நண்பர் கிருஷ்ணா... தன் கைச்

செலவிற்கு 50 ரூபாய் கிடைத்தாலும் "ஏதோ ஒரு புத்தகம் வாங்கிக் கொள்ளுங்கள் சார்" என்று தன் பாக்கெட்டைக் காலி செய்து இதயத்தை நிரப்பிக்கொள்கிற நண்பர் பாலன், விடுமுறையில் வீடு வரும்பொழுதெல்லாம் என்னைச் சந்தித்துப் பேசுவதில் மகிழ்ச்சி கொள்ளும் புதுதில்லி எஸ்.வி. கல்லூரியின் அரசியல் அறிவியல் பேராசிரியர் முனைவர் தங்கவேல் என்ன புத்தகம் வேண்டுமென்றாலும் புதுதில்லியிலிருந்து வாங்கி அனுப்புவார். இவர்கள் அனைவரும் 21-ம் நூற்றாண்டின் அதிசயங்களாய் எனக்குத் தெரிவதில் வியப்பில்லை.

இறந்துபோன என் தந்தை எனக்கு மீண்டும் கிடைத்ததைப் போல என் மதுரை மாமா புலவர் செல்வராசு, கோவை "யாழ் நூலகம்" அறிஞர் துரைமடங்கன் எனக்காகப் பழைய புத்தகக் கடைகளுக்குச் சென்று தேவையானவற்றை வாங்கித் தருகிறவர்கள். நெடுநாளைக்குப் பிறகு துரைமடங்கன் வைத்த நம்பிக்கையாய் நெருஞ்சி இலக்கிய முற்றம்.

மொழி இலக்கியத் திங்கள் சந்திப்பொன்றில் என்னைச் சிறப்புரை ஆற்ற அழைத்த புலவர் ஆதி, புலவர் குப்புராசு, நாளைய வரலாற்றை நெருஞ்சி இலக்கிய முற்றத்தின் அமைப்பாளர்கள் நான் உள்ளிட்ட முத்தமிழ் விரும்பியிடமும், தென்பாண்டியனிடமும் கொடுத்திருக்கிற எங்களின் வழிகாட்டி அறிஞர் ஞானி, கவிஞர் சிற்பி, கவிஞர் புவியரசு, எழுத்தாளர் நாஞ்சில் நாடன், ஓவியர் ஜீவா, பேராசிரியர் தே. ஞானசேகரன், மாநில வங்கி மேலாளர் த. செயகுமார், கடிதங்கள் மூலம் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிற நண்பர் வால்பாறை ஜெயபிரகாஷ், எழுத்தாளர் சுப்ரபாரதிமணியன், கவிஞர் கோவை சதாசிவம். நெருஞ்சியின் திங்கள் சந்திப்புகளுக்குத் தவறாது அனைத்து உதவிகளையும் அளிக்கும் நண்பர்கள் இரமேசு, பிறைசூடி, புகழேந்தி, அல்லிராஜ், படைப்பாளர்கள் இளஞ்சேரல், ஃறிணன், இசை, ... நீள்கிற பட்டியலில் நினைவிற்கு வராத பெயர்களால் வெட்கித் தலைகுனிகிறேன்.

1997-ம் ஆண்டு எனது ஆங்கிலக் கவிதை நூலான " The Wind and a leaf " - யை வெளிக்கொணர்ந்த இந்திய ஆங்கிலக்

கவிஞர் திரு. பல்தேவ் மிர்சாவை ஒருமுறை கூட நான் நேரில் பார்த்ததில்லை. அலிகாரில் நடந்து கொண்டிருந்த அச்சுப்பணி குறித்துத் திங்கள் ஒரு கடிதம் எழுதிவிடுவார். தனது "Skylark" என்ற ஆங்கிலக் கவிதைக்கான காலாண்டிதழையும் தவறாது அனுப்பி வைப்பார். மொழி, இனம், முகம் கடந்து என் வளர்ச்சியின் மீது அக்கறைகொண்ட பல்தேவ் மிர்சாவை சந்திக்க முடியாததன் ஏக்கம் ஒரு நாள் கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தில் தீர்ந்து போனது. பல்தேவ் மிர்சாவின் இன்னொரு பெயராக காளிதாசனால் அறிமுகப்படுத்தப்பட்ட முத்தமிழ் விரும்பி.

எகிப்திலிருந்த அடிமைகள் முப்பாட்டன் ஆப்ரகாமின் வம்சத்திற்கு வழங்கப்பெற்ற வானுலகு வந்து சேர மோசசின் கட்டளைக்கு... மன்னிக்க... முத்தமிழ் விரும்பியின் கட்டளைக்கு இரண்டாய்ப் பிளந்து வழிவிட்ட கடல் நடுவே பயணித்தவர்களில் நானும் ஒருவன்.


முத்தமிழ் விரும்பியுடன் கடற்குதிரை தனபாலனும், கவிஞர் தென்பாண்டியனும், கவிஞர் நர்கீஸ் பானுவும், ஏஞ்சல் குமாரபாண்டியனும், புகைப்படக்கலைஞர் ஞானகுருவும், கடற்குதிரை பதிப்பாளர் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியை மதிப்பிற்குரிய திருமதி. காவேரி கிருஷ்ணாவும்

இவர்களின் அன்பின் நிறமறியாத் தூரிகை ஆகிறேன் நான்.

– பா. மீனாட்சி சுந்தரம்
14-04-2005

'ஈதேன் தோட்டம்'
பழைய எண்.9, புதிய எண்.13
இலட்சுமிபுரம், 6வது வீதி
ஹோப் காலேஜ், பூளைமேடு
கோவை - 641 004.

கடற்குதிரை



மனிதம் பெரிதும் சிதறிவிடும்
இந்த மின்னணு யுகத்தில்
சமூக உறவுகள் மீதான
பிரியங்களையும்
தன் வாழ்நிலம் குறித்த
பதிவுகளையும்
ஒரு குழந்தையின்
உள்ளங்கையில்
கிளைக்கும் ரேகையெனப்
பதிவாகியிருக்கும்
பா.மீ.யின் கவிதைகள்
நீரடித் தாவரமாய்
ஆழ் மனதில் அசைகிறது.

– தென்பாண்டியன்